# திருக்குர்ஆன்

قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مَنْ قَرَأَ الْقُرْآنَ فَقَدْ اسْتَدْرَجَ النُّبُوَّةَ

بَيْنَ يَدَيْهِ غَيْرَ اَنَّهُ لَا يُوْحَى اِلَيْهِ كَذَا اَخْرَجَهُ الْحَاكِمُ

"திருக்குர்ஆனை ஒருவர் ஓதினால் நபித்துவத்தை தன் முன் பதிப்பித்துக் கொண்டார். என்றாலும், அவருக்கு வஹீ அறிவிக்கப்படவில்லை" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருப்பதாக **அல்ஹாக்கிம்** ரஹ்மத் துல்லாஹி அலைஹி அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ اِذَا اَحَبَّ اَحَدُكُمْ اَنْ يُحَدِّثَ رَبَّهُ فَلْيَقْرَا

الْقُرْآنَ اخرجه الخطيب والديلمى فى الفردوس عن انس رضى الله تعالى عنه

"உங்களில் ஒருவர் தம்முடைய றப்புடன் பேசுவதை

விரும்பினால் அவர் திருக்குர்ஆனை ஓதட்டும்'' என்று **அல்கத்தீபும், ஃபிர்தவ்ஸில்** தைலமீ ரஹ்மத்துல்லாஹி அலைஹிமா ஆகிய இருவரும் எழுதியுள்ளார்கள். இதனை அனஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

عَنْ هَارُوْنَ بْنِ مَعْرُوْف اَنَّهُ قَالَ اَقْبَلْتُ على الْحَدِيْث وتركْتُ قِرَاْةَ الْقُــرْآن
فَرَايْتُ فِى الْمَنَامِ شَخْصًا يَقُوْلُ مَنْ قَرَأَ الْقُرْآنَ وَآثَرَ الْحَدِيْثَ على الْقُرْآنِ غُــذِّبَ
فَمَا اَتَى عَلَيَّ اِلاَّ زَمَانٌ قَلِيْلٌ حَتَّىٰ ذَهَبَ بَصَرِيْ كذا فى الاحياء فى اداب التلاوة

''நான் ஹதீஸில் முனைந்து, திருச்குர்ஆன் ஓதுவதை நிறுத்தி விட்டேன். 'எவர் திருக்குர்ஆனை ஓதி திருக்குர்ஆன் ஓதுவதைப் பார்க்கினும் ஹதீஸை சிறந்ததாக எடுத்துக் கொண்டாரோ அவர் வேதனை செய்யப்படுவார்' என்று ஒருவர் கூற நான் கனவு கண்டேன். சொற்ப காலங்கள் கழித்து என் பார்வை அகன்று விட்டது'' என்று ஹாரூனுப்னு மஃரூப் ரஹ்மத் துல்லாஹி அலைஹி அவர்கள் கூறியதாக இமாம் கஸ்ஸாலீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் **இஹ்யாஉ உலூமித்தீன்** என்ற நூலில் எழுதப்பட்டிருக்கிறது.

قَالَ يحيَي بْنُ مُعاذ مَنْ لَمْ يَكُنْ فِيْهِ ثَلَاثٌ خصال فَلَيْسَ بِمُحِبٍّ يُوْثِرُ كَلَامَ الله تعالى
عَلى كَلَامِ الْخَلْقِ وَلِقَاءَ الله تَعَالى عَلَى لِقَاءِ الْخَلْقِ وَالْعِبَادَةَ عَلَى خِدْمَةِ الْخَلْقِ كـــذا
ذكره الغزالى فى محبة الله ورسوله

''எவரிடத்தில் மூன்று தன்மைகள் இல்லையோ அவர் முஹிப்பு (இறை நேசச் செல்வர்) அல்லர். சிருஷ்டிகளின் பேச்சைப் பார்க்கினும் அல்லாஹ்வின் பேச்சை அவர் சிறந்ததாகத் தேர்ந்



தெடுத்துக் கொள்ள வேண்டும். சிருஷ்டிகளைச் சந்திப்பதைப் பார்க்கினும் அல்லாஹு தஆலாவைச் சந்திப்பதை சிறந்ததாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். சிருஷ்டிகளுக்கு ஊழியம் செய்வதைப் பார்க்கினும் இபாதத் என்னும் வணக்கத்தை சிறந்ததாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்'' என்று யஹ்யப்னு மஆத் குத்திஸ ஸிர்ருஹு அவர்கள் கூறியதாக அல்இமாமுல் கஸ்ஸாலி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறியுள்ளார்கள்.

وعَنْ ابْنِ مسْعُوْدٍ رَضي الله تعالى عَنْهُ قال
اذا اردتُمُ الْقِرَاْةَ فَآثِرُوا الْقُرْآنَ فَاِنَّ فِيْهِ عِلْمَ الْاَوَّلِيْنَ وَالْآخــرِيْنَ

''நீங்கள் ஒத விரும்பினால் திருக்குர்ஆனைத் தேர்ந் தெடுத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் அதில் முன்னோர்கள் பின்னோர்கள் பற்றிய (இல்மு என்னும்) ஞானம் இருக்கிறது'' என்று இப்னு மஸ்ஊத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கூறியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

''உன்னுடைய விர்தை கித்தாபிலும் சுன்னத்திலும் (குர்ஆனிலும் ஹதீஸிலும்) உள்ளதாக ஆக்கிக் கொள். (அவ்வாறு நீர் செய்தால் அதாவது குர்ஆன் ஹதீஸில் உள்ளதை விர்தாக ஆக்கிக் கொண்டால்) உலமாக்கள், உதபாக் (மார்க்க அறிஞர்கள், சன்மார்க்கப் பண்பாளர்)களில் நீர் ஆகி விடுவீர். அப்பொழுது நீர் திக்ரையும் திலாவத்தையும் (ஓதுவதையும்) ஒருங்கே செய்தவராவீர். உமக்கு திக்ருச் செய்தவர் திலாவத்துச் செய்தவர் ஆகிய இருவரின் கூலியும் கிடைக்கும்'' என்று சில மஷாயிகுகள் கூறி இருக்கின்றனர்.

மேலேயுள்ள ஹதீஸ்களிலும், பெரியோர்களின் பொன் மொழிகளிலும் நாம் தெரிந்து கொள்வதென்ன? திருக்குர் ஆன் ஹதீஸ்களில் இல்லாதவற்றை விர்தாக ஓதுவதில் பிரயோஜன மில்லை என்பது மட்டுமின்றி நன்மைகளையும் அடைய முடியாது என்பதையும் புரிந்து கொள்கிறோம்.

قال رَسُوْلُ اللهِ صَلّىَ اللهُ عَلَيْه وَسَلّمَ لاَ يَقْبَلُ اللهُ قَوْلاً الاّ بالْعَمل ولا نقْبل قَوْلاً

ولاَ عملاً الاّ بالنّيّة وكذا قال عليه الصلوة والسلام لا اجْر لمنْ لا نيّة لَهُ

``அமலைக் கொண்டல்லாமல் சொல்லை (மட்டும்) அல்லாஹ் அங்கீகரிக்க மாட்டான். நிய்யத்தைக் கொண்டு அல்லாமல் சொல்லையும் செயலையும் அவன் அங்கீகரிக்க மாட்டான்`` என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள். இவ்விதமாகவே நிய்யத்து இல்லாதவருக்கு கூலி இல்லை.

وَقال أبُوْ هُرَيْرَةَ رَضِىَ اللهُ تَعَالَى عَنْهُ النَاسُ يُبْعَثُوْنَ يَوْمَ الْقِيَامَة عَلى قَدْرِ نيّاتِهِمْ

``கியாமத்து நாளில் ஜனங்கள் அவரவருடைய நிய்யத்திற்குத் தக்கவாறு எழுப்பப்படுவார்கள்`` என்று ஹளரத் அபூஹுரைரா ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் கூறியுள்ளார்கள்.

وقَالَ رَسُوْلُ اللهِ صَلّىَ اللهُ عليْه وَسلّمَ فى الْحديْث الْقُدْسي الْاخْلاصُ سِرٌّ مِنْ اسْرارِيْ

اسْتَوْدعُهُ قَلْب منْ احبُّ منْ عبادىْ كذا فى سيد على

``இக்லாஸ் (அந்தரங்க சுத்தி - சுயநலமின்மை) என்பது என்னுடைய இரகசியங்களிலுள்ள ஒரு இரகசியம். என்னுடைய அடியார்களில் நான் விரும்புபவரின் இருதயத்தில் அதனை நான்



வைக்கிறேன்`` என்று ஹதீஸ் குதுஸியில் இறைவன் கூறி இருப்பதாக வந்துள்ள ஹதீஸ் **ஷெய்கு அலீ** என்ற நூலில் எழுதப்பட்டிருக்கிறது.

**அறிந்துகொள்:-** எந்தக் காரியம் செய்யப்பட்டாலும், அதற்கு நான்கு காரியங்கள் மிகவும் அவசியம். 1. செய்யப் போகும் காரியம் இன்னது என்பதை முதலாவதாக அறிந்திருக்க வேண்டும். இன்ன காரியத்தைச் செய்யப் போகிறோம் என்பதைப் புரியாமலேயே ஒரு காரியத்தை பைத்தியக்காரன்தான் செய்வான், பைத்தியம் இல்லாவிடில் அவருக்கு அறிவு என்பதே இல்லாமலிருக்க வேண்டும். அதாவது போதைப் பொருளை அருந்தியோ அல்லது புகைத்தோ நினைவிழந்திருக்க வேண்டும். நினைவிழந்து செய்திருந்தால் பெரும்பாலும் அந்தக் காரியம் கெட்டுப்போகும். ஒழுங்கான முறையில் அந்தக் காரியம் நிறைவேற்றப்பட மாட்டாது.

2. ஒரு காரியத்தைச் செய்தால், அது எந்த இலாபத்தை உத்தேசித்துச் செய்யப்படுகிறது அல்லது எந்தக் கெடுதலைத் தவிர்த்துக் கொள்வதற்காகச் செய்யப்படுகிறது என்ற குறிக்கோள் இருக்க வேண்டும். குறிக்கோள் இல்லாமல் செய்யப்படும் காரியம் பெரும்பாலும் முற்றுப் பெறுவதில்லை. முற்றுப் பெற்றாலும் அதன் பலனை பூரணமாக அடைய முடிவதில்லை. இக்குறிக் கோளுக்குத்தான் நிய்யத்து என்று பெயர். நிய்யத்து இல்லாத காரியத்திற்குக் கூலி இல்லை என்பது ஹதீஸின் கருத்து.

قال عليه الصلوة والسلام لا اَجْر لمَنْ لا نيّة لَهُ

``நிய்யத்து இல்லாதவருக்கு கூலி இல்லை`` என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக் கிறார்கள்

3. ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கிய பின்னர் எத்தனை சிக்கல்களும் தடைகளும் ஏற்பட்ட போதினும் அவற்றை சகித்துக் கொண்டு அதனைப் பூர்த்தி செய்வதில் கண்ணுங் கருத்துமாக இருந்து முயலவேண்டும். இதற்கு பொறுமை என்றும் விடா முயற்சி என்றும் கூறுவர். இது இல்லாவிடில் தவறுகள், பிழைகள்தான் மலியும். இதனைக் குறித்துத்தான் `முயற்சி திருவினையாக்கும்` என்ற பழமொழி பிறந்தது.

4. எந்தக் காரியமாக இருந்தாலும் அதனுடைய அடிப்படை அந்தரங்க சுத்தியாக (இக்லாசாகி) இருக்க வேண்டும். இவ்வுலகில் வாழ்வோருக்கு எத்தனையோ விதமான தேவைகள் இருக்கலாம். இவற்றைப் பூர்த்தி செய்யாமல் பிறர் நலத்தை மட்டுமே குறிக்கோளாக வைக்க வேண்டும் என்பது (இக்லாஸின்) அந்தரங்க சுத்தியின் கருத்தல்ல. இதே கருத்து அந்தரங்க சுத்திக்கு (இக்லாசுக்கு) ஏற்படுத்தினால் எந்த இமாமும் மஸ்ஜிதில் நியமிக்கப்பட முடியாது. எந்த முதர்ரிசும் மத்ரஸாவில் ஓதிக் கொடுக்க இயலாது. எந்த ஆசிரியரும் நூல்களை இயற்ற இயலாது. எந்த வெளியீட்டாளரும் நூல்களை அச்சிட்டு வெளியிட இயலாது. அரசு ஊழியராகப் பதவியில் எவரும் நிலைத்திருக்க முடியாது. உலகமே ஸ்தம்பித்து விடும். முன்னேற்றம் என்ற வார்த்தையையே அகராதியிலிருந்து அகற்றிவிட வேண்டியதுதான். தனக்குத் தேவையான அளவில் ஊதியம் பெறுவது அந்தரங்க சுத்திக்கு (இக்லாசுக்கு) விரோதமல்ல. உலகச் செல்வத்தை திரட்டுதல், உலக மக்களில் ஆதிக்கங் கொள்தல் போன்றவை அடிப்படை நோக்கமாக பிரதானக் கொள்கையாக இருத்தல் கூடாது என்பதுதான் அந்தரங்க சுத்தி (இக்லாஸ்) என்பதற்கு எதிர்மறைக் கருத்து. உலகச் செல்வம், கௌரவம், புகழ் ஆகியவை தானாகவே



வந்தால் வரட்டும். ஆனால் அதனை எதிர்பார்க்கலாகாது. அவ்வாறு எதிர்பார்த்துச் செய்யப்படும் காரியம் இவ்வுலகில் வெற்றி பெற்று அதனால் மற்றவர்கள் பிரயோஜனம் அடைந்த போதினும் மறுமையில் அக்காரியத்தைச் செய்தவர் அதற்குரிய நன்மையை பூரணமாக அடைய மாட்டார். அதனை அந்தரங்க சுத்தியான (இக்லாசான) செய்கை என்று இறைவன் ஏற்றுக் கொள்ள மாட்டான். ஆகவே. திருக்குர்ஆனை ஓதுவோரும் அதனைக் கற்றுக் கொள்வோரும் அதன்படி செயல்படுவோரும் மேற்கண்ட நான்கு அம்சங்களையும் கருத்தில் கொண்டு இறைவனின் அங்கீகாரத்தை முதல் குறிகோளாகக் கொள்ள வேண்டும்.

திருக்குர்ஆனை ஓதுவதற்கு நிய்யத்து தேவை இல்லை. இதைத் தவிர உள்ள ஏனைய விர்துகளுக்கு நிய்யத்து தேவை. குறிப்பிட்ட ஒரு காரியம் நிறைவேறுவதற்காக திருக்குர்ஆனை ஓதுவதாக இறைவனிடம் நிய்யத்துச் செய்து கொண்டால், அதற்காக திருக்குர்ஆனை ஓதிடின் அப்பொழுது அந்த வேண்டுதலை நிய்யத்துச் செய்ய வேண்டும் என்று அல்இமா முஸ்ஸூயூத்தி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தம்முடைய **தஃப்ஸீர் அல்இத்கானில்** எழுதியுள்ளார்கள்.

திருக்குர்ஆனை சப்தமிட்டும் ஓதலாம். சப்தமில்லாமலும் ஓதலாம். இரண்டுக்கும் மறுமையில் நன்மைப் பயன் உண்டு. எனினும், அடியிற்கண்ட ஏழு ஷர்த்துகளும் பேணப்பட்டால் சப்தமிட்டு ஓதுவதுதான் சிறப்பு. நன்மைப் பயனும் அதிகமுண்டு என்பதாக ஸெய்யிதுனா அபூதாலிபில் மக்கீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தங்களுடைய **கூத்துல் குலூப்** என்ற நூலில் எழுதியுள்ளார்கள்.

1. எழுத்துப் பிழையில்லாமல் உச்சரிப்பு பேதம் இல்லாமல் ஓதுதல்.

2. அழகிய முறையில் ஓதுதல். நல்ல சப்தத்தில் ஓதுதல்.

3. குர்ஆன் ஓதுபவரின் இரு செவிப் புலன்களுக்கும் அது கேட்கப்பட வேண்டும். ஓதுபவரின் இருதயத்தை எழுப்பி விடவேண்டும். குர்ஆனின் கருத்துக்களை ஓதுபவர் புரிய வேண்டும்.

4. சப்தமிட்டு ஓதுவதால் அவருடைய தூக்கம் கலைய வேண்டும்.

5. குர்ஆன் ஓதும் சப்தத்தைக் கேட்டு பக்கத்தில் தூங்குபவர் விழித்துக் கொள்ள வேண்டும். (தூங்காமலிருந்து வணங்க வேண்டும் என்ற கொள்கையுள்ள பலர் ஓரிடத்தில் தூங்கும்போது அவரும் துயிலெழுந்து தமது வணக்கத்தை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பளிப்பதற்காக இப்படிச் செய்யலாம். அந்தக் கொள்கை இல்லாமல் தூங்குவோருக்கு இடைஞ்சல் செய்யலாகாது.)

6. தாம் ஓதுவதைப் பார்த்து மற்றவரும் ஓதட்டும் அல்லது வணக்கம் புரியட்டும் என்ற எண்ணம் இருக்க வேண்டும் (இது திக்ரு செய்வதற்காக கட்டி வைக்கப்பட்டுள்ள இடங்களில்தான் சாத்தியம்).

7. இவ்வாறு ஓதுவதன் மூலம் தம்முடைய (திலாவத்தை) ஓதுதலை அதிகமாக்கிக் கொள்ள வேண்டும். தம்முடைய இந்த வழக்கத்தை நிரந்தரமாகச் செய்ய வேண்டும்.



இவ்வாறான கருத்துகள் இருந்தால் சப்தமிட்டு ஓதுவது சிறந்தது. மரணித்தவர்களில் எவருக்காவது நன்மையைச் சேர்ப்பிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் குர்ஆன் ஓதினாலும் சரி, நஃபில் தொழுதாலும் சரி, தான தர்மங்கள் செய்தாலும் சரி குறிப்பிட்ட ஒருவரை மட்டும் நிய்யத்துச் செய்யாமல் ஏனைய முஃமின் முஸ்லிம்களையும் சேர்த்துக் கொண்டால் அதன் நன்மை ஒவ்வொருவருக்கும் பூரணமாகக் கிடைக்கும். அந்த நன்மைகள் பங்கிடப்பட்டு ஒவ்வொரு வருக்கும் பகிர்ந்தளிக்கப்படாமல் முழுமையாகவே கொடுக்கப்படும். அல்லாஹுத்தஆலா தாராளமானவன், குறுகிய நோக்கமற்றவன் என்பதாக ஸெய்யது அஹ்மதுல் ஃபாரூக்கி ஸர்ஹிக்கி முஜத்திதே அல்பதானீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறியுள்ளார்கள்.

(ஹுலூருல் கல்புடனும், இக்லாஸுன்னிய்யத்துடனும்) மன ஓர்மையுடனும், அந்தரங்க சுத்தியான நிய்யத்துடனும் அல்லாஹுத்தஆலாவை திக்ருச் செய்வது சுன்னத்து. அல்லாஹுத்தஆலாவை சப்தமின்றி திக்ருச் செய்வதும் சுன்னத்து. சப்தமிட்டு திக்ருச் செய்வதைப் பார்க்கினும் மெதுவாக திக்ரு செய்வது எழுபது மடங்கு சிறந்தது. திக்ரில் சிறந்தது மெதுவாக திக்ருச் செய்வதுதான் என்று ஹதீஸில் கூறப்பட்டி ருக்கிறது. மெதுவாக திக்ருச் செய்வதில் (ரியாவுக்கு) (பிறர் நம்மைப் புகழ்வதற்கு) இடமில்லை. இக்லாஸ் என்னும் அந்தரங்க சுத்தியும் ஏற்படும். இது ஆரம்ப நிலையிலுள்ளவர்களுக்கு அல்ல. ஆரம்ப நிலையிலுள்ளவர்களை அவர்களுடைய ஞான குருவாகிய ஷெய்கு முர்ஷிது சப்தமிட்டு திக்ருச் செய்யுமாறு கட்டளையிடுவார். சப்தமிட்டு திக்ருச் செய்வதால் மனதில் தோன்றும் ஊசலாட்டங்கள் குறையும். இதனால்தான் காலை, மாலை, வாராந்திர, மாதாந்திர

ராத்திபுகளை ஏற்படுத்தி ஆரம்ப நிலையிலுள்ள தங்கள் சிஷ்யர்களுக்கு ஷெய்குமார்கள் பயிற்சியளிக்கின்றனர்.

திக்ருல் கல்பீ என்பது, திக்ரு ஜஹ்ரீ (சப்தமிட்டு திக்ருச் செய்தல்) திக்ருல் கஃபிய்யி (மெதுவாக திக்ருச் செய்தல்) ஆகிய இரண்டில் எதிலும் சேராத மூன்றாவது வகை. இந்த திக்ரு இருதயத்திற்கு மட்டும் சம்பந்தப்பட்டது. நாவுக்கு இதில் சம்பந்தமில்லை. இந்த திக்ரை கிராமன் காத்திபீன் என்ற மலக்குகள் எழுதுகிறார்களா அல்லவா? என்பதைக் குறித்து அறிஞர்கள் விவாதித்துள்ளனர். "நறுமணத்தை மனிதர் உணர்ந்து கொள்வது போல திக்ருல் கல்பியை மலக்குகள் உணர்ந்து கொள்கிறார்கள். ஆதலால், அதனையும் கிராமன் காத்திபீன்கள் பதிவு செய்து விடுவர்" என்று ஒரு சாரார் கூறி இருக்கின்றனர். திக்ருல் கல்பியில் நாவிற்கோ எழுதுகோலுக்கோ சம்பந்தமில்லை. ஆதலால், கிராமன் காத்திபீன்களின் பதிவேட்டில் அது பதிவு செய்யப்பட மாட்டாது. அல்லாஹு தஆலாவைத் தவிர வேறு யாருக்கும் அது தெரியாது என்று மற்றொரு சாரார் கூறி இருக்கின்றனர்.

லாஇலாஹ இல்லல்லாஹு என்ற தஹ்லீலும் தஸ்பீஹுகளும் நாவால் திக்ருச் செய்வது சிறந்ததா இருதயத்தால் மட்டும் திக்ருச் செய்வது சிறந்ததா என்பதைக் குறித்தும் ஞானவான்கள் ஒருமித்த கருத்து உரைக்கவில்லை. இதிலும் இரண்டு விதக் கருத்துகள் இருக்கின்றன. ஆயினும் நாவால் திக்ருச் செய்வதில் இருதயம், நா ஆகிய இரண்டு அவயங்கள் செயல்படுவதால் அதுதான் சிறந்தது என்பவர்களின் கருத்துதான் மிகச் சரியானது என்பதாக அல்இமாம் அன்னவவீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தம்முடைய **ஷரஹ் முஸ்லிமில்** எழுதியுள்ளார்கள்.



ஸெய்யிதுத் தவாயிப் அல்ஜுனைதுல் பகுதாதி குத்திஸ ஸிர்ருஹு அவர்கள் மனிதனின் உணவு, உறைவிடம், உறக்கம் உள்பட சகல செய்கைகளும் நடவடிக்கைகளும் அல்லாஹு தஆலாவிற்காகவே செய்யப்பட்டதாக பதிவு செய்யப்பட்டு நன்மைப் பயன் அளிக்கப்படுவதற்கு உரிய வழியைக் காட்டியுள்ளார்கள். அது **வஸாயல் குத்ஸீ** என்ற நூலில் எழுதப்பட்டிருக்கிறது. அதன் கருத்து வருமாறு.

ஃபுக்கராக்களே! (அல்லாஹுத்தஆலாவின்பால் மட்டும் தேவைப்படுகிறவர்களாகிய துறவிகளே) நீங்கள் அறியப்படுவதெல்லாம் அல்லாஹுத்தஆலாவினாலேயே, நீங்கள் கண்ணியப்படுத்தப்படுவதெல்லாம் அல்லாஹுத்தஆலாவிற்காகவே. நீங்கள் மற்றவர்களை விட்டுத் தனித்திருக்கையிலும் நீங்கள் அல்லாஹுத்தஆலாவுடனேயே இருக்க வேண்டும். அது எப்படி முடியும் என்பதைச் சிந்தியுங்கள். அடியானுடைய சகல நேரங்களும் அல்லாஹுத்தஆலாவிற்கு வழிபாடு செய்தல் என்னும் வணக்க மாகவே ஆகிவிடுதல் சாலும். உண்ணல், பருகல், உறங்குதல், மனைவியுடன் சயனித்தல், அவளுடன் உடலின்பங் கொள்ளல், பேசுதல் உள்பட சகல விஷயங்களும் செயல்பாடுகளிலும் அமைதியுடன் இருப்பதும் வணக்கங்களாக ஆகிவிடுவது நிய்யத்தைப் பொறுத்திருக்கிறது.

உண்பதால் உடல் வலிமை உண்டாகும். அதனால் இறைவனை வணங்க உதவி கிடைக்கும் என்றும், பானம் அருந்துவதாலும் தாகந் தீர்ந்து இறை வணக்கத்திற்கு ஊக்கமுண்டாகும் என்றும். உறங்குவதால் உடல் அசதியும் சோர்வும் நீங்கி வணக்கத்திற்கு எழுச்சி கிடைக்கும் என்றும் மனைவியுடன் சயனித்து உடலின்பங்கொள்வதால் ஷரீஅத்தில் மனைவிக்கு கணவன் செய்ய வேண்டியவை என்று நிர்ணயிக்

கப்பட்ட கடமைகளுள் ஒன்றை நிறைவேற்றுவதாகவும், சரீர இச்சையும் மன ஆசையும் ஹராமான காரியங்களில் செல்ல விடாமல் தடை செய்வதாகவும் அல்லாஹுத்தஆலாவை வணக்கம் புரிகிற ஸாலிஹான நற்குழந்தை பிறக்க இது ஒரு காரணமாக இருக்கக் கூடும் என்பதாகவும் நிய்யத்துச் செய்ய வேண்டும். உடலைக் கொழுக்க வைக்க வேண்டும், வளர்க்க வேண்டும், உண்ணல் பருகலில் இன்பங் காண வேண்டும், உறக்கத்தால் உடல் இன்பத்தைப் பெற வேண்டும். உடலின்பத்தால் மன ஆசையை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்று மட்டும் கருதுவது கூடாது. இதுபோலவே ஷரீஅத்து கட்டளையிட்டவாறு ஹலாலான உணவைச் சம்பாதித்துப் புசிக்க வேண்டும் என்பதை இலட்சியமாக வைத்து தொழில் செய்தல், வர்த்தகம் செய்தல், விவசாயம் செய்தல் உள்பட சகல காரியங்களும் வணக்கமாக கணிக்கப்படும். ஆகவே, மனிதனின் சகல அமல்களும் நிய்யத்து நல்லதாக இருப்பின் வணக்கங்களாக மாறி நன்மைப் பயன்களை ஈட்டித் தருவனவாகி விடுகின்றன. கியாமத்து நாளில் நன்மை தீமைகள் நிறுக்கப்படும் போது இவை யாவும் நன்மைகளில் சேர்ந்து கனமாகி விடும். இதற்கு முக்கிய ஷர்த்து, இவை யாவும் சுன்னத்து என்னும் பெருமானாரின் முன் மாதிரிக்கு உரிய அதபுகளை (ஒழுக்கங்களைப்) பேணிச் செய்வதுதான்.

இப்படிச் செய்வதால் இவை யாவும் பிரகாசங்களாக மாறி மன இருளை அகற்றி, அதிலுள்ள கரைகள் மாசுகள் என்ற தீய குணங்களைத் துடைத்து, அகவொளிகளை அரும்பி, மனிதப் பிறவியிலுள்ள குறைகளைக் குறைத்து, மலக்குகளின் தன்மைகளை வளர்த்து விடும். இதனைக் குறித்து,



اللَّهُ وَلِيُّ الَّذِينَ آمَنُوا يُخْرِجُهُمْ مِنَ الظُّلُمَاتِ إِلَى النُّورِ

**"அல்லாஹ் விசுவாசங் கொண்டவர்களுக்கு மேலாண்மைக்காரனாகி, அவர்களை இருள்களிலிருந்து வெளியேற்றி பிரகாசத்தினுள் சேர்க்கிறான்"** என்று திருமறை வசனம் குறிப்பிடுகிறது.

**குறிப்பு:-** திக்ருல் ஜஹ்ரீ என்பது பிறருக்குக் கேட்கும் விதத்தில் திக்ருச் செய்தல், திக்ருல் கஃபீ என்பது தனக்கு மட்டும் கேட்கும் விதத்தில் திக்ருச் செய்தல். இவ்விரு வகை திக்ருகளில் நா உதடு ஆகிய புற அங்கங்களும், இருதயமும் செயல்படும். திக்ருல் கல்பி என்பது தனக்கும் கூட கேட்காத விதத்தில் திக்ருச் செய்தல். இதில் இருதயம் மட்டும்தான் செயல்படும், புற அங்கங்களாகிய நா உதடு ஆகிய இரண்டுக்கும் அலுவல் இல்லை.

திக்ருல் ஜஹ்ரீ பரமார்த்திகத் துறையில் ஈடுபடுகிற ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்கும், பயிற்சி பெறுவோருக்கும் சிறந்தது. இதில் ரியாஉ என்னும் பிறர் புகழ்வதற்காக செய்யும் காரியத்திற்கும் இடமுண்டு, மஸ்ஜிதுகளில் தொழுகை நேரங்களில் திக்ருல் ஜஹ்ரீயைச் செய்வதால் தொழுது கொண்டிருக்கிற மற்றவர்களுக்கு இடைஞ்சல்கள் ஏற்படவும் வாய்ப்புண்டு. ஆதலால், கூட்டமாகச் சேர்ந்து தொழுகையல்லாத நேரங்களில் திக்ரு மஜ்லிஸ்களை மஸ்ஜிதிலோ மற்றைய இடங்களிலோ நடத்துவதில் குற்றமில்லை. எனினும், வசதியுள்ள ஊர்களில் திக்ரு மஜ்லிஸ்களை மஸ்ஜிது அல்லாத இடங்களில் நடத்துவதே சிறந்தது. ஷாதுலி தரீக்காவிலுள்ளவர்கள் **ஜாவிய்யா** என்ற பெயரில் கட்டடங்களைக் கட்டி அவற்றில் திக்ரு மஜ்லிஸ்களை

நடத்துகின்றனர். காதிரிய்யா தரீக்காவைச் சேர்ந்தவர்கள் **மல்ஹரிய்யா** என்ற பெயரில் கட்டடங்களைக் கட்டி வைத்து அவற்றில் திக்ரு மஜ்லிஸ்களை நடத்துகின்றனர். மற்றைய தரீக்காக்களைச் சேர்ந்தவர்கள் இம்மாதிரியான இடங்களுக்கு **தக்கிய்யா** என்று கூறுகின்றனர். உர்தூ. ஃபார்ஸி, துருக்கி மொழிகள் பேசுகிற நாட்டினர் தக்கிய்யாக்களுக்கு **கான்காஹ்** என்று பெயர் கூறுகின்றனர். தமிழ்நாட்டில் சில இடங்களில் உள்ளவர்கள் **தைக்கால்** என்று கூறுகின்றனர். தைக்கால் என்பது தக்கிய்யா என்ற சொல்லிலிருந்து மருவிய சொல்லைத் தவிர வேறல்ல.

தனி நபர் மஸ்ஜிது, தக்கிய்யா, ஜாவிய்யா, மல்ஹரிய்யா, கான்காஹ் போன்ற இடங்களில் தனி நபர்கள் திக்ருல் ஜஹ்ரியைச் செய்யாதிருப்பதும் தங்களுடைய சொந்த இடங்களில் இவற்றைச் செய்வதும்தான் சிறந்தது. பொதுப்பட தனி நபர்களும், பயிற்சி முடிந்து தேறியவர்களும் திக்ருல் கஃபிய்யைச் செய்வதுதான் சிறந்தது.

## திருக்குர்ஆன்

நபிகள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எழுதப் படிக்காத உம்மி நபியாக இருந்ததால், தங்களுக்கு திருக்குர்ஆன் அருளப்பட்ட உடனே காத்திபுல் வஹீ (வஹீயை எழுதுபவர்கள்) மூலம் உடனுக்குடன் எழுதி வைக்கச் செய்திருந்தார்கள். வேறு சிலரும் அதனைப் பார்த்து தங்களுக்கென எழுதி வைத்திருந்தனர். ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் கலீஃபாவாக இருந்த போது இவைகள் ஒன்று சேர்க்கப்பட்டு புத்தக



வடிவில் அமைக்கப்பட்டது. ஹளரத் உதுமான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் காலத்தில் இது பல பிரதிகள் எழுதப்பட்டு இஸ்லாமிய அரசாங்கத்தின் மாநில கவர்னர்களுக்கு ஆளுக்கு ஒரு பிரதி அனுப்பி வைக்கப்பட்டது. அவற்றைப் பார்த்து ஆங்காங்கு உள்ளவர்கள் நகல் எடுத்துக் கொண்டனர். அச்சக வசதி இல்லாததால் அக்காலத்தில் இப்படி எடுத்தெழுதி பல பிரதிகளாக்கப்பட்டது. அப்புறம் அச்சு வசதி ஏற்பட்ட பின் கோடிக்கணக்கில் இக்காலத்தில் திருக்குர்ஆன் அச்சிடப்படுகிறது.

اَخْرَجَ اِبْنُ مَاجه عَنْ سَعْد رَضِىَ اللهُ تَعَالٰى عَنْهُ قَالَ قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ خِيَارُكُمْ مَنْ تَعَلَّمَ الْقُرْآنَ وَعَلَّمَهُ كذا فى الْجامع الصَّغِيْر

"திருக்குர்ஆனைக் கற்று அதனைக் கற்றுக் கொடுத்தவர்தான் உங்களில் சிறந்தவர்" என்று பெருமானார் ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இதனை அறிவித்தவர் ஸஃது ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களாவார். இது பிரசித்தி பெற்ற ஆறு கிரந்தங்களில் ஒன்றான **இப்னு மாஜாவில்** எழுதப்பட்டிருக்கிறது.

يَعْنِى خَيْرُ الْكَلَامِ كَلَامُ اللهِ تَعَالٰى كَذَالِكَ خَيْرُ النَّاسِ بَعْدَ النَّبِيِّيْنَ مَنْ تَعَلَّمَ الْقُرْآنَ وَعَلَّمَهُ اي اختار قرأته على غير كلام الله تعالى كذا في شرح المصابيح

"பேச்சில் சிறந்தது அல்லாஹ்வின் பேச்சு இது போல நபிமார்களுக்குப் பிறகு மனிதரில் சிறந்தவர் திருக்குர்ஆனைக் கற்று அதனைக் கற்றுக் கொடுத்தவர் அதாவது இதர பேச்சுக்களை விடுத்து திருக்குர்ஆன் ஓதுவதை சிறந்ததாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டவர்" என்பதாக **ஷரஹுல் மஸாபீஹில்** எழுதப்பட்டிருக்கிறது.

فى جامع الترمذي من حديث ابي سعيد الخدري رضي الله تعالى عنه قال قال رسول الله صلى الله عليه وسلم يقول الله عز وجل من شغله القرآن عن ذكري ومسألتي اعطيته افضل ما اعطي السائلين

"என்னை திக்ருச் செய்யவும் என்னிடத்தில் தன் குறைகளைக் கூறி அவற்றை நிவர்த்தி செய்யவும் நேரமில்லாமல் குர்ஆன் ஓதுவது எவரைக் கட்டுப்படுத்தி விட்டதோ அவருக்கு, என்னிடத்தில் கேட்டுப் பெற்றுக் கொள்வோர் அடைவதை விட அதிகம் சிறந்ததை நான் கொடுப்பேன் என்று அல்லாஹுதஆலா கூறுகிறான்" என்று ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூஸயீதினில் குத்ரீ ரலியல் லாஹுதஆலா அன்ஹு அவர்கள் அறிவித்துள்ளார்கள். இது பிரசித்தி பெற்ற ஆறு கிரந்தங்களில் ஒன்றான **அல்ஜாமிஉத் திர்மிதியில்** எழுதப்பட்டிருக்கிறது.

اخرج الطبرانى من حديث ابن عباس رضى الله تعالى عنهما قال قال رسول الله صلى الله عليه وسلم من تعلم كتاب الله تعالى ثم اتبع ما فيه هداه الله تعالى به من الضلالة ووقاه الله تعالى يوم القيامة سوء الحساب كذا فى الاتقان

"அல்லாஹுதஆலாவின் வேதத்தைக் கற்று, பின்னர் அதிலுள்ளதைக் கடைப்பிடித்தவரை வழி தவறுவதை விட்டு அல்லாஹுதஆலா நேர்வழியிற் சேர்க்கிறான். இன்னும் இறுதி நாளில் விசாரணையினால் ஏற்படும் தீமைப் பயனை விட்டு அவரை அல்லாஹுதஆலா காப்பாற்றுகிறான்" என்று பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹுமா அவர்கள் அறிவித் துள்ளார்கள் **(நூல் தப்ரீ)**



"திருக்குர்ஆனைக் கற்று அதனைப் பிறருக்கு கற்றுக் கொடுப்பவர்தான் மனிதரில் சிறந்தவர்" என்று மேலே கூறப்பட்டுள்ள ஹதீஸ் மிகைப்படவுள்ளது என்று முஸ்லிம் அல்லாதார் கருதக் கூடும். முஸ்லிம்களிலும் சன்மார்க்கத்தைப் புரிந்து கொள்ளாதவர்களும் சன்மார்க்க நெறியினைக் கடைப் பிடிக்காதவர்களில். எல்லாம் புரிந்து கொண்டதாக தங்களைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிற சிலரும் கூட மனத்தினுள் எண்ணக் கூடும்.

இவ்வுலகையும் இதிலுள்ள யாவற்றையும் மனித னுக்காக சிருஷ்டித்து அவற்றை மனிதன் எவ்வாறு பயன் படுத்தினால் இம்மை மறுமைப் பேறுகளைப் பரிபூரணமாகப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை உணர்த்தும் வழிகாட்டி யான திருக்குர்ஆனைக் கற்றுக் கொள்வதைப் பார்க்கினும் சிறந்த கல்வி வேறு ஒன்று மில்லை. அதனைக் கற்று அதன்படி நடப்பதுவே நேர் வழியைக் கடைப்பிடிப்பதாகும். இக்கல்வியைக் கற்று இதன்படி நடந்து பிறருக்கும் இதனைக் கற்றுக் கொடுப்பதைப் பார்க்கினும் சிறந்த அமல் வேறு எதுவும் இல்லை. திருக்குர் ஆனைக் கற்றுக் கொள்ளல் அதனைப் பிறருக்குக் கற்றுக் கொடுத்தல் என்பது இக்காலத்தில் நம் நாட்டிலுள்ள குர்ஆன் மத்ரஸாக்களில் அர்த்தம் தெரியாமல் அரபி உச்சரிப்பு பேதமின்றி ஓதக் கற்றுக் கொள்வதை மட்டும் குறிக்காது. குர்ஆன் ஷரீபை அர்த்தத்துடன் ஓதக் கற்றுக் கொள்வதைக் குறிக்கிறது. அர்த்தம் புரிந்தால்தான் அதிலுள்ள ஏவல் விலக்கல்களையும், தர்ம நியாயங்களையும் தெரிந்து அதனைப் பின்பற்றி நடக்க முடியும். அவ்வாறு நடப்பது நேர்வழியிற் செல்லல் ஆகும். இப்படிச் சென்றவர்தான் இறுதி நாளின் விசாரணையின்போது

இறைவனின் கருணைக்கு உரியவராகுவார் என்பதை நம்மவர் உணர வேண்டும்.

தேவை இல்லாத மனிதர் உலகில் எவருமில்லை. இறை நம்பிக்கையுள்ளவர்கள் இறைவனை பிரார்த்திக்கின்றனர். அதல்லாதவர் முயற்சி செய்கின்றனர். இது பலிக்காத சமயத்தில் மனித சக்திக்கு அப்பால் ஒரு சக்தி இயங்குகிறது என்று கூறி தங்களது தோல்வியை இறுதியாக அங்கீகரிக்கின்றனர். அச்சமயத்தில் அவர்களுக்கு இறை நம்பிக்கை ஏற்படுவது என்னவோ உண்மை. என்றாலும் இறை மறுப்புச் செய்ததை தவறு என பகிரங்கமாக அங்கீகரிக்க அவர்களது கர்வம் அவர்களைத் தடுத்து விடுகிறது. ஆதலால் ஏதோ ஒரு சக்தி இயங்குகிறது. அச்சக்தியை இன்னது என அறியவோ கூறவோ இயலவில்லை. ஆகவே, மக்களின் சகல தேவைகளையும் பூர்த்தி செய்கிற நாயன் திருக்குர்ஆன் ஓதுவதிலும் அதனை ஆராய்வதிலும், அதன்படி நடப்பதிலும், பிறருக்கு அதனைக் கற்றுக் கொடுப்பதிலும் முழு நேரத்தையும் செலவு செய்பவர்களுக்கு அவர்களுடைய தேவைகளை முதன்மையாகவும் அவர்களுக்கு தேவையான அளவுக்கு அதிகமாகவும் சிறப்பாக நிறைவேற்றுகிறான் என்பதையும் மேலேயுள்ள ஹதீஸின் மூலம் தெரிந்து கொள்கிறோம். என்றாலும் பிரபஞ்ச மாயையில் சிக்குண்ட நம்மவர் இவ்வுண்மையைப் புரிந்து கொண்ட போதினும் அதன்படி செயலாற்றத் தவறி விடுகின்றனர்.

عَنْ انس بْن مالك رَضى الله تعالى عَنْهُ عن النَّبي صلىَ الله عَلَيْه وسلم انَّهُ قـال

مَنْ عَلم ولده القُرْآن قَلَّدهُ الله تعالى بقلادة منْ نُور يتعجبُ منْهُ الاوّلـون والآخرون

``எவர் தம் புதல்வருக்கு திருக்குர்ஆனைக் கற்றுக் கொடுக்கிறாரோ அவருக்கு அல்லாஹுதஆலா ஒளியினாலான மாலையை அணிவிக்கிறான். அதனைப் பார்த்து முன்னோர்களும் பின்னோர்களும் ஆச்சரியமடைவர்`` என்று நபிகள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அனஸுப்னு மாலிக் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அறிவித்ததாக ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.



இவ்வாறே.

وكذا قال عليه الصلوة والسلام مَنْ قرأ الْقرْآن وعمل به الْبس

والداهُ تاجا يوْم الْقيامة ضوْئُهُ احْسنُ منْ ضوْء الشمْس فىْ بُيُوْت الدُّنْيا

``எவர் திருக்குர்ஆனை ஓதி அதன்படி செயலாற்றுகிறாரோ அவருடைய இரு பெற்றோர்களும் கியாமத்து நாளில் கிரீடத்தை அணிவிக்கப்படுகிறார்கள். இவ்வுலகிலுள்ள வீடுகளிலுள்ள பிரகாசத்தைப் பார்க்கினும் அழகாக இருக்கும் அதன் பிரகாசம்`` என்று நபிகள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

رُوي عنْ حُذيْفة بن الْيمان وابيْ سعيْد الْخُدْري رضى الله تعالى عنْهُما مرْفوْعا

انَ الْقوْمَ يبْعثُ الله عليْهمْ الْعذاب حتْما مقْضيا فيقْرأُ صبيٌّ منْ صبْيانهمْ فى

الْمكْتب الْحمْدُ لله ربَ الْعالميْن فيسْمعُ الله تعالى ويرْفعُ عنْهُمْ بسببه الْعذاب

اربْعيْن سنة كذا في بفيسر ابن عادل

``அல்லாஹுதஆலா ஒரு சமூகத்தார் மீது இறுதி முடிவாக வேதனையை அனுப்புகிறான். அச்சமயத்தில் குழந்தைகளில் ஒரு குழந்தை அல்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன் என்று ஓதுகிறார்.

அதனை அல்லாஹுதஆலா செவியேற்று. அக்குழந்தையின் காரணமாக நாற்பது வருட காலத்திற்கு அவர்களை விட்டு வேதனையை அகற்றுகிறான்'' என்று அபூஸயீதினில் குத்ரீ, ஹுதைஃபத்துப்னுல் யமான் ரலியல்லாஹுதஆலா அன்ஹுமா ஆகிய இரு ஸஹாபிகளும் கூறியிருக்கிறார்கள். இந்த ஹதீஸ் மர்ஃபூஆன ஹதீஸ். இந்த விபரம் தஃப்ஸீர் இப்னு ஆதில் என்ற நூலில் எழுதப்பட்டிருக்கிறது.

اَخْرَجَ التِّرْمِذِيُّ عَنْ اِبْنُ عَبَّاسٍ رَضِىَ اللهُ تَعالَى عَنْهُما عَن النَّبِيِّ صلَّى اللهُ عَلَيْهِ
وَسلَّمَ اَنَّهُ قَالَ اِنَّ الَّذِيْ لَيْسَ فِىْ جَوْفِهِ شَيْءٌ مِنَ الْقُرْآنِ كَالْبَيْتِ الْخَرِبِ كذا فِي التجريد

"எவருடைய உள்ளத்தில் திருக்குர்ஆனிலிருந்து எதுவும் இல்லையோ அவர் குடியிருப்பில்லாத வீட்டைப் போலிருக்கிறார்'' என்று நபிகள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹுமா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்று ஆறு பிரபல கிரந்தங்களில் ஒன்றான **திர்மிதி**யில் கூறப்பட்டிருக்கிறது. இவ்விதமாக **அத்தஜ்ரீதில்** எழுதப்பட்டிருக்கிறது.

அன்புடையீர் திருக்குர்ஆனைக் கற்றுக் கொண்டு அதன்படி நடப்போருக்கும், அவருடைய பரக்கத்தால் அவருடைய தாய் தந்தை ஆகிய இருவருக்கும் மறுமையில் எவ்வளவு பெரிய அந்தஸ்தும் பாக்கியங்களும் இருக்கின்றன என்பதையும், தன்னுடைய மக்களுக்கு குர்ஆன் ஷரீபைக் கற்றுக் கொடுப்பதால் எவ்வளவு பாக்கியங்கள் மறுமையில் கிடைக்கின்றன என்பதையும், இவ்வுலகில் மக்கள் செய்யும் பாவங்களால் இவ்வுலகிலேயே அவர்களை தண்டிக்க வேதனை அனுப்பப்படுகின்றன. ஆயினும், குர்ஆன் மத்ரஸாக்களில் குழந்தைகள் குர்ஆன் ஓதும்



சப்தங்கேட்டு அவ்வேதனைகள் நாற்பது வருடங்களுக்குத் தள்ளி வைக்கப்படுகின்றன என்ற விபரத்தையும் மேலேயுள்ள ஹதீஸ்கள் மூலம் தெரிந்து கொள்கிறோம். எனினும், இந்த ஹதீஸுக்கு இலக்கான முறையில் நாம் நடந்து கொள்கிறோமா? என்பதை நம்மில் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். அரசாங்க வேலையில் சேருவதற்கு குறிப்பிட்ட ஒரு வயது எல்லையாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட வயது வந்தவுடன் அரசாங்க வேலையிலிருந்து விலகி ஓய்வு கொள்ள வேண்டும். இது உலகம் முழுவதிலுமுள்ள ஒவ்வொரு அரசாங்கமும் கடைப்பிடிக்கும் ஒரு நியதி.

அரசாங்க வேலையைத் தவிர்த்து தொழில் நிறுவனங் களிலும் வியாபார ஸ்தலங்களிலும் இதேபோன்று ஒரு நடைமுறை கடைப்பிடிக்கப்படுகிறது. ஆனால், கல்விக்கு மட்டும் ஆரம்ப வயதோ கடைசி வயதோ நிர்ணயிக்கப்படவில்லை. மஹ்து (தொட்டில்) முதல் லஹ்து (மரணம்) வரையில் கல்வி கற்கும் காலம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதாவது குழந்தை பிறந்து மடிப்பிள்ளையாக இருக்கும் காலத்திலிருந்து கல்வி கற்கும் காலம் தொடங்குகிறது. மரணித்து கப்ரினுள் வைக்கப்படும் காலம் வரையில் அது நீடிக்கிறது என்பது இந்த நியதியின் கருத்து. இதனை எவர் ஆராய்ந்தாலும் மனிதன் தன் வாழ்நாள் முழுவதும் பள்ளிக் கூடத்திலோ, குடும்ப வாழ்விலோ, தொழிற்சாலையிலோ, வியாபார ஸ்தலத்திலோ அனுபவப் பூர்வமாக புதுப்புது அறிவுகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் வந்து கொண்டே இருக்கின்றன. இதற்கு முடிவே இல்லை. சன்மார்க்க அறிவைப் பெருக்கிக் கொள்ள நம்மவரில் தொண்ணூற்றொன்பது சதவிகிதத்தினர் முனைவதில்லை. இளம் வயதில் விஷயம் புரியாமல் சன்மார்க்க

அறிவைப் பெருக்கிக் கொள்ளவில்லை. வயது வந்த பின்னர் வாலிப முறுக்கால் சிந்திக்கவில்லை. முதுமை வந்த பின்னர் படிக்கும் காலம் முடிந்து விட்டதாக நினைத்துக் கொண்டு சோம்பி இருந்து விடுகிறோம். இறுதிநாளில் சன்மார்க்க அறிவை ஏன் பெருக்கிக் கொள்ளவில்லை என்று வினவப்பட்டால் நாம் மார்க்கத்தைப் புரிந்து கொள்ளாமல் இருந்தது நியாயம் என்பதை எந்த விஷயத்திலும் நிரூபிக்க முடியாது. தண்டிக்கப்படுவது உறுதி. இதனை விட்டுத் தப்பித்துக் கொள்ள வேண்டுமாயின் நமது குழந்தைகளை மத்ரஸாவிற்கு அனுப்ப வேண்டும். முதியோர் கல்விக் கூடங்களை ஏற்படுத்தி முதியோர் அதில் பயில வேண்டும். இவ்விரண்டுக்கும் வசதியில்லாதார் சன்மார்க்கம் சம்பந்தப்பட்ட நூல்களைச் சொந்தத்தில் வாங்கி குறிப்பிட்ட சில நேரங்களை ஒதுக்கி வைத்துப் படிக்க வேண்டும். இஸ்லாமிய நூல் நிலையங்களை ஆங்காங்கு ஏற்படுத்தி அவற்றில் இஸ்லாமிய நூல்களை சேமித்து இரவல் கொடுத்து படிக்க வைக்க வேண்டும். நூல் நிலையங்களை ஏற்படுத்தி அவற்றில் அமர்ந்தும் படிக்கலாம். சன்மார்க்க அறிஞர்களை அண்டி அவர்களிடத்தில் தனிப்பட்ட முறையில் பயிலலாம். இவை எதிலும் நம்மவர் கவனங்கொள் வதில்லை. போன காலம் போக வருங்காலத் திலேனும் இவற்றைத் திருத்திக் கொள்ள முயலுவோமாக. திருக்குர்ஆன் ஓதுதல் என்பது நமது சிறார்கள் மத்ரஸாக்களில் அர்த்தமின்றி பார்த்து ஓதக் கற்றுக் கொள்வதை மட்டும் குறிக்காது. அத்துடன் சன்மார்க்க சட்டம், சன்மார்க்கக் கொள்கை, ஒழுக்கம், பண்பாடு உள்பட சன்மார்க்கச் கல்விகள் அத்தனையையும் குறிக்கிறது என்பதை நாம் மறந்து விடலாகாது.



## வணக்கங்களின் முறை

"தொழுகைக்கு வெளியில் திருக்குர்ஆனை ஓதுவதைப் பார்க்கினும் தொழுகையில் திருக்குர்ஆனை ஓதுவது மிகச் சிறந்தது. தக்பீர் தஸ்பீஹுகளை ஓதுவதைப் பார்க்கினும் தொழுகையில்லாமல் (வெறுமனே) திருக்குர்ஆனை ஓதுவது சிறந்தது. ஸதக்காவைப் பார்க்கினும் தக்பீர், தஸ்பீஹ் சிறந்தது. (நஃபில்) நோன்புகளைப் பார்க்கினும் ஸதக்கா சிறந்தது. நோன்பு நரகை விட்டுக் காக்கும் கேடயம்" என்று ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அன்னை ஆயிஷா ஸித்தீக்கா ரலியல்லாஹுதஆலா அன்ஹா அறிவித்ததாக **தாருகுத்னீ, தப்ரானி** ரஹ்மத்துல்லாஹி அலைஹிமா ஆகிய இருவரும் எழுதியுள்ளார்கள் என்று **அல்ஜாமி உஸ்ஸகீர்** என்ற நூலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**அறிந்துகொள்:-** நோன்பு நோற்பது உடல் திமிரை ஒடுக்கி பாவமான செய்கைகளைச் செய்யாமல் தடுத்துவிடும். ஆதலின், இதற்கு நரகத்தை விட்டுக் காப்பாற்றும் கேடயம் என்று பெயர். உடல் திமிர் பணக்காரர், ஏழை ஆகிய சகலருக்கும் சகஜமாக ஏற்படும் காரியம் இதனை ஒடுக்குவதற்கு மிகச் சிறந்த மருந்து நோன்புதான்.

நோன்பு நோற்று உடல் திமிரை ஒடுக்கிய போதினும் பணக்காரர்களை அவர்களுடைய செல்வம் பிரபஞ்ச மாயையில் இட்டுச் செல்லும். பணம் இல்லாதாருக்கு இவ்வுலகம் இல்லை என்பது பழமொழி. ஆதலால், பணம் சேர்க்க வேண்டும். பணம் இருந்தால்தான் உலகில் மதிப்பு, கௌரவம் கிடைக்கும் என்ற நினைப்பில் மனிதன் தான தர்மஞ் செய்வதை நிறுத்தி விட்டு

அல்லது குறைத்துக் கொண்டு பணம் சேர்ப்பதில் முழு மூச்சாக இறங்கி விடுவான். இப்படிப்பட்டவரை நோன்பு நோற்குமாறு பணித்தால் வருடம் முழுவதும் நோன்பு நோற்க தயாராகி விடுவார். தொழுமாறு பணித்தால் இரவு முழுவதும் ஒற்றைக் காலில் நின்று வணங்க பின் வாங்கமாட்டார், இந்த மனப்பான்மையுள்ளவர். நஃபில் நோன்பு நோற்பதிலும் சிறந்தது தான் தர்மஞ்செய்வதுதான். தான தர்மம் என்பது கடமையான ஜக்காத்து நூற்றுக்கு இரண்டரை விகிதத்துக்கு மேல் அதிகமாகக் கொடுப்பதைக் குறிக்கிறது.

சிலர் தான தர்மஞ்செய்வதில் உற்சாகமாக இருப்பர். ஏனெனில், தான தர்மம் செய்வதில் பேறும் புகழும் உண்டாகிறதல்லவா? ஆதலால், பேறு, புகழுக்கு ஆசையை உண்டு பண்ணி அவருடைய தான தர்மத்துக்கு மறுமைப் பயன் இல்லாமல் ஷைத்தான் கெடுத்துவிட முயல்வான். ஆதலால், தான தர்மஞ்செய்வதுடன் அவர் தக்பீர் தஸ்பீஹுகளையும் ஓதினால் அவருள்ளத்தில் புகழ் பெற வேண்டும் என்ற ஆசையை கொஞ்சங்கொஞ்சமாகக் குறைத்து இறுதியில் உலகப் புகழின்பால் ஆசையில்லாமற்செய்து விடும். ஆகவே, இப்படிப்பட்டவன் தஸ்பீஹ், தக்பீர் ஓதுவது சிறந்தது.

"தஸ்பீஹ் தக்பீரைப் பார்க்கினும் திருக்குர்ஆனை ஓதுவது சிறந்தது." ஏனெனில், தஸ்பீஹ், தக்பீர்களின் பொருள்களையும் கருத்துகளையும் முதலாவதாக உணர வேண்டும். அத்துடன் பேண வேண்டிய வேறு பல காரியங்களும் இருக்கின்றன. திருக்குர்ஆனை அர்த்தம் புரியாமல் வெறுமனே ஓதினாலும் பத்து நன்மை கிடைக்கும். எவ்விதமாக ஓதினாலும் நன்மை இல்லாமற்போகாது. ஆகவே, மன ஓர்மையின்றி



அர்த்தம் புரியாமல் தக்பீர், தஸ்பீஹ் ஓதுவதைப் பார்க்கினும் திருக்குர்ஆனை ஓதுவது சிறந்தது. அதினும் தொழுகைக்காக நிய்யத்துச் செய்து தக்பீர் கட்டிக் கொண்டு சூரத்துல் ஃபாத்திஹாவை முதலாவதாக ஓதிவிட்டு எம்மு சூரத்துக்குப் பதிலாக திருக்குர்ஆன் முழுவதையுமோ, ஒரு பகுதியையோ, ஒரு ஜுஸ்உவையோ, பெரிய சிறிய சூரத்து முழுவதையுமோ ஓதுவது அதைவிடச் சிறந்தது என்பது இந்த ஹதீஸின் கருத்து.

இறை வழிபாட்டில் இஸ்லாமிய அடிப்படை ஃபர்லு களாகிய ஐங்கால தொழுகை, ரமலான் நோன்பு, நூற்றுக்கு இரண்டரை விகிதமுள்ள ஜக்காத்து, வயதில் ஒரு முறை ஹஜ்ஜுச் செய்தல் ஆகியவற்றை நிறைவேற்றிய பின்னர் சிறந்த வணக்கம் திருக்குர்ஆனை ஓதுதல்.

## நோய் விலக்கலும் ஓதிப்பார்த்தலும்

இக்காலத்தில் நோய்களுக்கு சிலர் ஓதிப் பார்க்குமாறு வேண்டுகின்றனர். அவர்களுடைய வேண்டுகோளை நிராகரிக் காமல் ஆலிம்களும் ஆமில்களும் பெரியோர்களும் ஓதிப் பார்க்கின்றனர். தட்டையில் எழுதிக் கொடுத்துக் கழுவிக் குடிக்கச் சொல்கின்றனர். தாவீஸ் போடுகின்றனர். இதனைச் சிலர் ஆட்சேபிக்கின்றனர். காதியானிகள் (தற்போது வஹாபிகளும்) போன்றவர்கள் இதில் முன்னனியில் இருக்கின்றனர். கிண்டல் செய்கின்றனர். திருக்குர்ஆன் மக்களுக்கு நேர்வழி காட்டும் நூல் என்பதை மனிதனாகப் பிறந்தவர் எவரும் ஆட்சேபிப்பதற்கில்லை. அதே நேரத்தில் அதனைக் கொண்டு வேறு பிரயோஜனங்களை அடையக் கூடாது என்று விலக்கப்படவில்லை என்பதை மறந்து விடவும் கூடாது.

اخرج ابو عبيد واحمد والبخاري ومسلم وابو داؤد والترمذي والنسائ وابن ماجه وابن جرير والحاكم والبيهقي عَنْ ابِيْ سعيْدن الْخُدْرِيِّ رَضى الله تعالى عَنْهُ قال بَعثْنا رَسُوْلُ اللهِ صَلىَّ اللهُ عَلَيْه وَسلَّمَ فيْ سَريَّة ثلاثيْنَ رَاكبا فنزلْنا بقوْم من الْعرب فسألْناهُمْ انْ يُضيّفوْنا فأبوْا فلُدغ سيّدُهُمْ فأتوْنا فقالُوْا هل فيْكُمْ احدٌ يُرْقيْ من الْعقْرب فقُلْتُ نعمْ انا ولكنْ لا افْعلُ حتىّ تُعْطُوْنا شيْئا فقالُوْا انا نُعْطيْكُمْ ثلاثيْن شاةً فقرأْتُ عليْه الْحمْدُ لله ربّ الْعالميْن سبْع مرّات فلمّا قبضْنا الْغنم عرض فيْ أنْفُسنا منْها فكففْنا حتىّ اتيْنا النّبيَّ صلىّ الله عليْه وسلّم فذكرْنا ذلك لهُ فقال اما علمْت انّها رُقْيةٌ اقْسمُوْها واضْربُوْا ليْ بسهْم

"முப்பது வாகனக்காரர்களைக் கொண்ட ஒரு படையில் எங்களை ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அனுப்பினார்கள். அரபிகளைக் கொண்ட ஒரு கூட்டத்தாரிடம் நாங்கள் இறங்கினோம். எங்களுக்கு விருந்து அளிக்குமாறு அவர்களைக் கேட்டோம். அவர்கள் மறுத்து விட்டனர். பின்னர், அவர்களின் தலைவரை (தேள்) கொட்டி விட்டது. உடனே எங்களிடம் அவர்கள் வந்து "தேளுக்கு மந்திரிப்பவர் எவராவது உங்களில் இருக்கிறாரா?" என்று வினவினர். அப்பொழுது நான் "ஆம் நான்தான். என்றாலும், எங்களுக்கு எதையாவது நீங்கள் கொடுக்காத வரையில் நான் செய்ய மாட்டேன்" என்றேன். அதற்கவர் "உங்களுக்கு முப்பது ஆடுகளை (நபர் ஒன்றுக்கு ஒரு ஆடு வீதம்) தருகிறோம் என்றார். நான் "அல்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன் என்ற சூரத்தை ஏழு முறை ஓதி ஊதினேன் (விஷம்



இறங்கிற்று, பேசியபடி முப்பது ஆடுகளைத் தந்தார்கள்) ஆடுகளை நாங்கள் பெற்றுக் கொண்ட பின்னர், அதை (குர்ஆனை) ஓதி மந்தரிக்கலாமா? அதற்குக் கூலி வாங்கலாமா? என்பது பற்றி எங்கள் மனத்தில் (சந்தேகம்) உண்டாகி விட்டது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் நாங்கள் வரும் வரையில் (அந்த ஆடுகளை ஒன்றும் செய்யாமல்) வைத்துக் கொண்டோம். இவ்விபரத்தை பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் நாங்கள் கூறினோம். அதற்கவர்கள் "அது மந்திரம் என்பதை நீர் அறியீரோ அவற்றைப் பகிர்ந்து கொள்ளுங்கள். எனக்கும் ஒரு பங்கு கொடுங்கள்" என்று கூறினார்கள். இது அபூஸயீதினில் குத்ரீ ரலியல்லாஹுதஆலா அன்ஹு என்ற ஸஹாபி அறிவித்த செய்தி. இந்த ஹதீஸ் ஸிஹாஹு ஸித்தா என்று பிரபலம் அடைந்த **ஸஹீஹுல் புகாரீ, முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி, நஸயீ, இப்னு மாஜா** என்ற ஆறு நூல்களிலும், **இப்னு ஜரீர், அல்ஹாக்கிம், அல்பைஹக்கீ** உள்பட வேறு பல நூல்களிலும் எழுதப்பட்டிருக்கிறது.

திருக்குர்ஆனை ஓதி மந்தரிக்கலாமா அல்லவா? என்பதற்கும் மந்தரிப்பதற்குக் கூலி வாங்கலாமா அல்லவா? என்பதற்கும் இந்த ஹதீஸில் விளக்கங்கள் இருக்கின்றன. காதியானிகளும் (வஹாபிகளும்) அவர்களின் நூல்களைப் படித்த வாலிபர்களும் ஆலிம்களைக் குறை கூறும் நோக்கத்துடன் தங்கள் மனப் போக்கில் பேசி விடுகின்றனர். திருக்குர்ஆன் உலக மக்களுக்கு நேர்வழி காட்டுவதற்காக அருளப்பட்ட நூல் என்பதையும் அதில் கூறப்பட்டுள்ள ஏவல் விலக்கல்களை மதித்து நடக்க வேண்டும் என்பதையும் ஆலிம்கள் அறிந்துதான் இருக்கின்றனர்.

எத்தனையோ பேர் ஆலிம்களைப் போலும் ஆமில்களைப் போலும் உடையணிந்து உலக மக்களை ஏமாற்றுகின்றனர். ஆதலால், சகட்டு மேனியாக ஆலிம் வர்க்கத்தையும் ஆமில் வர்க்கத்தையும் வெறுப்பதும் தூஷிப்பதும் நன்மை பயக்காது.

اَخْرَجَ اَبُوْ نُعَيْم عَنْ اَبِي هُرَيْرَةَ رَضِىَ اللهُ تَعَالَى عَنْهُ قَالَ قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مَنْ اَخَذَ عَلَى الْقُرْآنِ اَجْرًا فَذٰلِكَ حَظُّهُ مِنَ الْقُرْآنِ

"குர்ஆனுக்காக ஒருவர் கூலி வாங்குவாராயின் அது குர்ஆனில் அவருக்குரிய பங்கு" என்பதாக ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

இது ஹளரத் அபூஹுரைரா ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் அறிவித்த ஹதீஸ். இதனை அபூநஈம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தங்களது நூலில் எழுதியுள்ளார்கள்.

இவ்விரு ஹதீஸ்களையும் அல்லாமல் வேறு பல ஹதீஸ்களும் இவ்விஷயங்களைப் பற்றி இருக்கின்றன. இது சிறிய நூல். ஆதலால் அவற்றை எழுத இயலவில்லை. விரிவான நூல்களில் இவற்றைக் காணலாம். மஸ்ஜிதுகளில் பணியாற்றுகின்ற இமாம்கள், முஅத்தின்கள், மத்ரஸாக்களில் பணியாற்றுகின்ற முதர்ரிஸ்கள், மக்தபுகளில் பணியாற்றுகின்ற முஅல்லிம்கள் சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்களில் சம்பளங்கள் வாங்குவது ஹலால் என்பதற்கு இந்த ஹதீஸ்கள் ஆதாரங்களாக இருக்கின்றன. திருக்குர்ஆனிலுள்ள சூரத்துல் ஃபாத்திஹா, சூரத்துல் இக்லாஸ், ஆயத்துல் குர்ஸீ ஆகியவை ஒவ்வொன்றும் தனித்தனியே



தஃப்ஸீர் என்னும் விளக்கமும் அவற்றை ஓதுவதால் ஏற்படும் இம்மை மறுமை பயன்களையும் பற்றிய நூல்கள் எம்மால் எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றை வாங்கிப் படித்து அன்பர்கள் பயனடைவார்களாக.

## சூரத்து யாஸீன்

اَخْرَجَ التِّرْمِذِيُّ مِنْ حَدِيْثِ اَنَسٍ رَضِىَ اللهُ تَعَالَى عَنْهُ عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ اِنَّ بِكُلِّ شَيْءٍ قَلْبًا وَقَلْبُ الْقُرْآنِ يٰس

"ஒவ்வொன்றிற்கும் ஒரு இருதயமுண்டு. திருக்குர்ஆனின் இருதயம் சூரத்து யாஸீன்" (அறிவிப்பவர். அனஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹு) நூல்: திர்மிதி

قَرَأَ الْقُرْآنَ اثْنَتَيْنِ وَعِشْرِيْنَ مَرَّةً وَاَيُّمَا مُسْلِمٍ قُرِئَ عِنْدَهُ اِذَا نُزِلَ بِهِ مَلَكُ الْمَوْتِ يٰس نَزَلَ بِكُلِّ حَرْفٍ عَشَرَةُ اَمْلَاكٍ يَقُوْمُوْنَ بَيْنَ يَدَيْهِ صُفُوْفًا يُصَلُّوْنَ عَلَيْهِ وَ يَسْتَغْفِرُوْنَ لَهُ وَيَشْهَدُوْنَ غُسْلَهُ وَيَتْبَعُوْنَ جَنَازَتَهُ وَيُصَلُّوْنَ عَلَيْهِ وَيَشْهَدُوْنَ دَفْنَهُ اَيُّمَا مُسْلِمٍ قَرَأَ يٰس وَهُوَ فِيْ سَكَرَاتِهِ لَمْ يَقْبِضْ مَلَكُ الْمَوْتِ رُوْحَهُ حَتّٰى يَجِيْئَهُ رِضْوَانُ بِشَرْبَةٍ مِنَ الْجَنَّةِ يَشْرَبُهَا وَهُوَ عَلٰى فِرَاشِهِ وَيَقْبِضُ رُوْحَهُ وَهُوَ رَيَّانٌ وَيَمْكُثُ فِيْ قَبْرِهِ وَهُوَ رَيَّانٌ وَلَا يَحْتَاجُ اِلٰى حَوْضٍ مِنْ حِيَاضِ الْاَنْبِيَاءِ حَتّٰى يَدْخُلَ الْجَنَّةَ وَهُوَ رَيَّانٌ

அல்லாஹுதஆலாவின் பொருத்தத்தை நாடி (பிறரை மெய்ப்பிப்பதற்காக அல்லாமல்) எவர் அதனை ஓதுகிறாரோ

அவரை அல்லாஹ் மன்னிக்கிறான். குர்ஆனை இருபத்து இரண்டு முறை ஓதியது போலாகும். மரணத்திற்குரிய மலக்கு எந்த முஸ்லிமிடத்திலாவது இறங்குகையில் அவரருகில் சூரத்து யாஸீன் ஓதப்பட்டால் அதனுடைய ஒவ்வொரு அட்சரத்திற்கும் பத்து மலக்குகள் இறங்கி, அவர் முன்னிலையில் அணியணியாக நின்று கொண்டு அவருக்காக ஸலவாத்துச் சொல்லி பிழை பொறுக்கத் தேடுகிறார்கள். அவருடைய பிரேதத்தை குளிப்பாட்டுவதிலும் ஆஜராகின்றனர். அவருடைய சடலத்தைத் தொடர்ந்து சென்று அவருடைய ஜனாஸா தொழுகையிலும் கலந்து கொண்டு, அடக்கம் செய்யும் போதும் உடனிருக் கின்றனர்.

எந்த முஸ்லிமாவது சக்கராத்தில் (மரணமயக்கத்தில்) இருக்கும் போது அவரருகில் சூரத்து யாஸீன் ஓதப்பட்டால், (சுவர்க்கத்து அதிபதியான) ரிள்வான் என்னும் மலக்கு சுவர்க்கத்திலிருந்து ஷர்பத்தைக் கொண்டு வந்து அவரை மரணப்படுக்கையில் இருக்கும் போதே அவரைக் குடிக்கச் செய்யாத வரையில் அவருடைய உயிரைக் கைப்பற்றுவதில்லை. அவர் மகிழ்ச்சியாக இருக்கையில் அவருடைய உயிரைக் கைப்பற்றுகிறார். அவருடைய கப்ரில் அவர் மகிழ்ச்சியாகவே தங்குகிறார் அவர் மகிழ்ச்சியுடன் சுவர்க்கம் புகும் வரையில் நபிமார்களின் ஹௌளுகளில் எந்த ஹௌளின் பாலும் தேவைப்படமாட்டார்.

(இதனால்தான் முஸ்லிம்களின் நோய் வாய்ப்பட்டவர் களுக்கு மரணத்தின் அறிகுறிவந்த உடனேயே அவர் தலைமாட்டிலிருந்து சூரத்து யாஸீனை ஓதுவது முஸ்தஹப்பு என்றும், உயிர் பிரிந்தவுடன் சவத்தின் அருகில் இருந்து ஓதாமல்



தூரவிலகி இருந்து குர்ஆன் கத்தம் செய்வது முஸ்தஹப்பு என்றும் ஃபிக்ஹு சட்ட நூல்களில் எழுதப்பட்டு இருக்கிறது. சன்மார்க்கக் கல்வியும் சன்மார்க்க பக்தியும் நிறைந்த குடும்பங்களில் இன்றுங் கூட இந்த முஸ்தஹப்பு சிறப்பான முறையில் நிறைவேற்றப்படுகிறது. நாகரீகத்தில் முதிர்ந்து விட்டதாகக் கருதிக் கொண்டிருப்போர் மரணித்த பிறகும் கூட சவத்திற்கு மருந்தை ஊட்டியும் ஊசிபோட்டும் மரணித்தவரைப் பிழைக்கச் செய்ய முயல்கிற விபரீதத்தையும் இக்காலத்தில் சில இடங்களில் காணமுடிகிறது. என்னே நாகரீகம், என்னை மத அறிவின்மை, என்னே மதபக்தி யின்மை. மரணிக்கும் போதேனும் நிம்மதியாக மரணிக்க விடலாகாதோ!)

وفى الحديث اقْرَأُوْا يس فانَ فيْها عشْرِيْن بركَةَ ما قرأها جـائعٌ الاَّ
شبع وما قرأها عارٍ الاَّ اكْتسى وما قرأها اعْزبُ الاَّ تزوَّجَ وما
قرأها خائفٌ الاَّ امن وما قرأها مسْجُوْنٌ الاَّ فُرِّجَ عنْهُ وما
قرأها مُسافرٌ الاَّ أُعيْنَ عليَ سفره وما قرأها رجُلٌ ضلَّتْ لهُ
ضالَّةٌ الاَّ وجدَها وما قُرأتْ عنْدَ ميت الاَّ خُفِّفَ عنْهُ وما
قرأها عطْشانٌ الاَّ رُوِيَ وما قرأها مرِيْضٌ الاَّ بُرِئَ

"சூரத்து யாஸீனை ஓதுங்கள். அதில் இருபது விதமான பரக்கத்துகளிருக்கின்றன. (அவற்றில் இவ்வுலகில் அடையும் பரக்கத்துகள்) வருமாறு. பசித்தவர் ஓதினால் பசி தீருவார். உடையில்லாதவர் ஓதினால் உடையணிவார். திருமண மில்லாதவர் ஓதினால் திருமணஞ் செய்வார். பயந்தவர் ஓதினால் பயம் நீங்குவார். சிறையிலடைக் கப்பட்டவர் ஓதினால்

விடுதலையடைவார். வழிப்போக்கர் ஓதினால் அவருடைய பிரயாணத்தில் உதவி செய்யப்படுவார். பொருளைத் தவறவிட்டவர் ஓதினால் அதனைத் திரும்பப் பெற்றுக் கொள்வார். மரணித் தவரருகில் (குளிப்பாட்டப்பட்ட பின்னர்) ஓதினால் வேதனை குறைக்கப்படுவார். தாகித்தவர் ஓதினால் தாகந்தீருவார். நோயாளி ஓதினால் குணமடைவார்''.

وَفِى الْحَدِيْث مَنْ دخَلَ الْمَقَابِرَ وَقَرأَ سُوْرَة يس خُفِّفَ عَنْهُمْ يَوْمَئِذٍ

وَكَانَ لَهُ بعَدَدِ مَنْ فِيْهَا حَسَنَةٌ كذا في روح البيان

"கப்ருஸ்தானில் நுழைந்தவர் அங்கு சூரத்து யாஸீனை ஓதினால் அன்றைய தினத்தில் கப்ருகளிள் யாவருக்கும் வேதனை இலேசாக்கப்படும்..அங்கு அடக்கப்பட்டி ருப்போரின் எண்ணிக்கையைத்தனை ஓதுபவருக்கும் உண்டு''. (இவ்விதமாக தஃப்ஸீர் ரூஹுல்பயானில் எழுதப்பட்டிருக்கிறது).

وَرُوِيَ باسْنَاد صَحِيْحٍ عَنْ اَبِيْ بَكْرِن الصِّدِّيْقِ وَابْنِ عَبَّاسٍ رَضِىَ الله

تعَالى عَنْهُمْ مَنْ قرَأَ سُوْرَةَ يس الى قوْله تعَالى اذْ جَائهَا الْمُرْسَـــلُوْنَ

وَ دَعَا عَلىَ اثرِهَا اُسْتُجِيْبَ لَهُ وَقدْ جُرِّبَ ذلكَ

ரிவாயத்து ''சூரத்து யாஸீனை ஓதுபவர் **இத் ஜாஅஹல் முர்ஸலூன்** என்ற ஆயத்தை ஓதியவுடன் தன்னுடைய தேவையைக் குறித்து துஆச் செய்து விட்டு அப்புறம் கடைசிவரை ஓதி முடித்தால் அவருடைய துஆ அங்கீகரிக்கப்படும்'' என்று ஹளரத் அபூபக்கர் ஸித்தீக், இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹும் கூறியுள்ளனர். இது அனுபவத்தில் கைகண்டது.



குறிப்பு

ஜியாரத்துச் செய்வதற்காக கப்ருஸ்தான்களுக்கோ தர்காக்களுக்கோ செல்பவர்கள் அங்கு சென்றவுடன்

اَلسَّلاَمُ عَلَيْكُمْ يَا اَهْلَ دَارَ قَوْمٍ مُؤْمِنِيْنَ اَنْتُمْ لَنَا سَلَفٌ وَنَحْنُ

لَكُمْ خَلَفٌ اَنَّا انْ شَاءَ الله بكُمْ لاَحِقُوْنَ

"மூமினான வர்க்கத்தாரின் வீட்டிலிருப்போரே! அஸ்ஸலாமு அலைக்கும். நீங்கள் எங்களுக்கு முந்தியவர்கள். நாங்கள் உங்களுக்குப் பிந்தியவர்கள்; இன்ஷா அல்லாஹுதஆலா நாங்களும் கூடியவிரைவில் உங்களுடன் வந்து சேர்ந்து விடுவோம்'' என்று கூறிவிட்டு சூரத்து யாஸீனை ஓதி அவர்களுக்கு ஈஸால் தவாபு செய்ய வேண்டும். மனனம் செய்தவர்கள் மனனமாக ஓதலாம். அஃதில்லாதவர் முஸ்ஹஃபைப் பார்த்து ஓதலாம். ஓதக் கற்றுக் கொள்ளாதவர்கள் சூரத்துல் இக்லாஸை பதினோரு தடவை ஓதலாம். பிறகு கப்ராளிகளின் பாவ மன்னிப்புக்காக அவர்களின் வேதனை குறைவதற்காக துஆசெய்து விட்டு திரும்பச் சென்று விட வேண்டும். கப்ருஸ்தானிலோ கப்ரின் அருகிலோ அமரலாகாது. நின்றவண்ணம் இவற்றைச் செய்யலாகாது. பெண்களும் இதே மாதிரிதான் செய்ய வேண்டும். பெண்களுக்கு பர்தா இருப்பதால் அவர்கள் பொது கப்ருஸ்தானுக்குச் செல்வது பொருத்தமான காரியமல்ல. அங்கு அப்பெண்களுக்கு மஹ்ரமாக இல்லாத ஆண்களும் அடக்கம் செய்யப்பட்டிருப்பதால் அங்கு அவர்கள் பர்தாவை அனுசரிக்க வேண்டும். உயிருடன் வாழும் போது எப்படி நடந்து கொள்வோமோ அப்படி அவர்கள் மரணித்த பிறகும் நாம் நடந்து கொள்ள வேண்டும். தங்களுடைய சொந்த மக்கள், சகோதரர்கள், கணவர் தாய் தந்தையர் போன்றவர்கள் தனியே

அடக்கப்பட்டு இருந்தால் அந்த இடத்திற்கு பெண்கள் பர்தா இன்றிச் செல்வதில் குற்றமில்லை. அங்கு சென்று பழைய ஞாபகங்களைக் கூறுவதும் அழுவதும் புலம்புவதும் கூடாது. பெண்கள் பெரும்பாலும் இவற்றைப் பேணி நடக்கமாட்டார் கள். ஆதலால்தான் பெண்கள் ஜியாரத்திற்கு செல்ல வேண்டாம் என்று ஆண்கள் தடை செய்கின்றனர்.)

اَخْرَجَ المحاملي في اماليه عَنْ عَبْدِ اللهِ بْنِ زُبَيْرٍ رَضِىَ اللهُ تعالى عَنْهُما قال
قَالَ عَلَيْهِ الصَّلوٰةُ وَالسَّلَامُ مَنْ جعل يس اَمَامَ حَاجَتِهٖ قُضِيَتْ لَهُ ولَهُ
شَاهِدٌ مرسل عند الدارمي كذا في الاتقان

"தன் தேவை நிறைவேற சூரத்து யாஸீனை எவர் முன்னிலையாக வைத்துக் கொள்கிறாரோ அவருக்கு அது நிறைவேற்றப்படும்".

"சூரத்து யாஸீனை ஓதி தனது தேவை நிறைவேறு வதற்காக துஆசெய்ய விரும்புவோர் மேலே ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களின் ரிவாயத்தில் கண்டவாறு ஓதி துஆ செய்யலாம் அல்லது அடியிற் கண்ட விபரங்களின் படி ஓதி துஆச் செய்யலாம்.

1. யாஸீன் என்ற முதல் ஆயத்தை மட்டும் ஏழு அல்லது இருபத்தோரு அல்லது நாற்பத்தோரு விடுத்தம் மடக்கி மடக்கி ஓதி விட்டு சூரத்து முழுவதையும் ஓதி துஆ செய்யலாம்.

2. முதலாவதாக யாஸீன் என்ற வார்த்தையை ஏழு முறை ஓதிவிட்டு யாஸீனை ஓதவேண்டும். ذٰلِكَ تَقْدِيْرُ الْعَزِيْزِ الْعَلِيْمِ என்ற ஆயத்து வரை . என்ற ஆயத்தை ஓதிவிட்டு அந்த ஆயத்தை



மட்டும் பதினான்கு முறை திரும்பத் திரும்ப ஓதிவிட்டு பின்னர் அடுத்த ஆயத்துகளை ஓதவேண்டும். سَلٰمٌ قَوْلًا مِّنْ رَّبٍّ رَّحِيْمٍ என்ற ஆயத்தை ஓதும் போது அதனை மட்டும் பதினாறு தடவை ஓத வேண்டும். அப்புறம்

اَوَلَيْسَ الَّذِىْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ بِقٰدِرٍ عَلٰٓى
اَنْ يَّخْلُقَ مِثْلَهُمْ ۚ بَلٰى ۚ

(36.81) என்ற ஆயத்தை ஓதும் போது அதனை மட்டும் நான்கு முறை ஓத வேண்டும் பிறகு சூரத்து முழுவதையும் ஓத வேண்டும். இந்த மாதிரியாக ஏழு முறை ஓதி துஆச் செய்தால் இன்ஷா அல்லாஹு தஆலா நாட்டம் நிறைவேறும்.

3. யாஸீன் என்பதை மட்டும் ஏழு தடவை ஓதிவிட்டு அப்புறம் ஆரம்பத்திலிருந்து ஓத வேண்டும். **முபீன்** என்ற இடத்திற்கு வந்தவுடன் நிறுத்திவிட்டு மீண்டும் யாஸீனை ஆரம்பத்திலிருந்து ஓத வேண்டும் இரண்டாவது **முபீன்** என்ற இடத்திற்கு வந்தவுடன் ஓதுகையை நிறுத்திவிட்டு மறுபடியும் ஆரம்பத்திலிருந்து ஓதவேண்டும். யாஸீன் சூரத்தில் ஏழு இடத்தில் **முபீன்** என்ற வார்த்தை இருக்கிறது. ஆதலால், ஏழுமுறை மீண்டும் ஆரம்பத்திலிருந்து ஓதிவிட்டு எட்டாவது தடவை ஆரம்பத்திலிருந்து ஓதி கடைசி வரை யாஸீன் சூரத்தை ஓதி முடிக்க வேண்டும். இப்படி ஓதுவதற்கு ஏறக்குறைய அரை மணி நேரம் ஆகும். இவ்விதமாக நாற்பது நாட்கள் தினசரி ஓதி துஆ செய்யவேண்டும். இதனை ஓத ஆரம்பிக்கும் போது பதினோரு தடவை ஸலவாத்துச் ஓதிக் கொள்ள வேண்டும். யாஸீன் சூரத்தை ஓதி முடித்த பிறகும் பதினோரு தடவை ஸலவாத்து ஓத வேண்டும். இவ்வாறு நாற்பது நாட்கள் ஓதி துஆ

கேட்டால் இன்ஷா அல்லாஹு தஆலா நாட்டம் நிறைவேறும். கை கண்டது. நாற்பது நாட்கள் ஓதி முடிப்பதற்கு முன்னதாகவே சிலருக்கு நாட்டம் நிறைவேறி இருக்கிறது.

## வன்னெஞ்சம் நீங்க

வணக்கம், பக்தி போன்றவற்றில் மனம் திரும்பாமல் வன்னெஞ்சம் உள்ளவர்களுக்கு குங்குமப்பூ மை கொண்டு பளிங்கு தட்டையில் சூரத்து யாஸீனை எழுதி கழுவிக் குடிக்கச் செய்தால் வன்னெஞ்சம் நீங்கி விடும். **நூல்:- இத்கான்.**

## நினைவாற்றல் உண்டாக

குங்குமப்பூ, பன்னீர் ஆகியவற்றால் மை தயார் செய்து சூரத்து யாஸீனை தட்டையில் எழுதிக் கழுவிக் குடித்தால் நினைவாற்றல் பெருகும். செவியேற்பது அத்தனையும் மனனமாகி விடும். இவ்விதமாக ஏழு நாட்கள் தொடர்ந்து செய்ய வேண்டும்.

## பால் சுரக்க

குழந்தைக்கு அமுதூட்டும் பெண்ணுக்கு இதைப் புகட்டினால் அமுது சுரக்கும். அவ்வமுதை அருந்துங் குழந்தைக்கு அது உணவாக மட்டுமின்றி இறைவன் கிருபையால் மருந்தாகவும் ஆகிவிடும்.

## நோய் நீங்க

நோயாளிகள் இதனை அருந்தினால் நோய் நீங்கும். ஆனால் சூரத்து யாஸீனுடன் சூரத்துல் ஃபாத்திஹாவையும்



முஅவ்விதத்தைனியையும் ஆயத்துல் குர்ஸீயையும் சேர்த்து எழுதிக் குடிப்பிக்க வேண்டும். குடிக்கும் போது "மகத்தான அல்லாஹ்வின் ஆயத்துகளையும் கண்ணியமான அவனது திருநாமங்களையும் கொண்டு நோய் குணமடைவதை நாடுகிறேன்" என்று நிய்யத்துச் செய்ய வேண்டும். அல்லாஹுத் தஆலா தன் கிருபையால் ஆரோக்கியத்தை அளிப்பான். இருதய படபடப்பு, திடுக்கம், நடுக்கம் போன்ற இருதய நோய் உள்ளவர்கள் இவ்விதமாக செய்ய வேண்டும்.

## பரக்கத்து உண்டாக

சூரத்து யாஸீனை எழுதி எந்த பொருளின் மீது கட்டினாலும் அதில் பரக்கத்து உண்டாகும். வியாபாரச் சரக்கில் வைத்தால் துரிதமாக இலாபத்துடன் விற்பனையாகும். கழனிகளில் வைத்தால் விளைச்சல் நன்றாக இருக்கும் என்று **ஷம்ஸுல் மஆரிஃப்** என்ற கிரந்தத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

## சூரத்துல் ஃபாத்தஹ்

اخرج البخاري في صحيحه عن رَسُوْلِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ انَّهُ قَالَ

لَقَدْ نَزَلَتْ عَلَيَّ اللَّيْلَةَ سُوْرَةٌ احَبُّ اليَّ مِنَ الدُّنْيَا وَمَا فِيْهَا وَفِيْ رِوَايَـــة

احَبُّ اِلَيَّ مِمَّا طَلَعَتْ عَلَيْهِ الشَّمْسُ ثُمَّ قَرَأَ انَّا فَتَحْنَا لَكَ فَتْحًا مُّبِيْنًا

"இன்றிரவு எனக்கு ஒரு சூரத்து அருளப்பட்டது. இந்த உலகையும் இதிலுள்ள யாவற்றையும் பார்க்கினும் எனக்கு அதிகப் பிரியமானது" என்று ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். **(புகாரி)**

"சூரியன் உதயமாகிற யாவற்றையும் பார்க்கினும் எனக்கு அதிகப் பிரியமானது" என்று கூறியதாகவும் வேறு ஒரு ரிவாயத்தில் இருக்கிறது. இவ்விபரத்தைக் கூறிய பின்னர் இன்னா ஃபத்தஹ்னா சூரத்தை ஓதிக் காட்டினார்கள்.

குறிப்பு:- ஹிஜ்ரீ 6ம் வருடத்தில் உம்ராச் செய்யும் நோக்கத்தில் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆயிரத்து நானூறு ஸஹாபிகளுடன் இஹ்ராம் கட்டிக் கொண்டு திருமக்காவிற்குச் சென்றார்கள். ஹுதைபிய்யாவில் மக்கத்து குறைஷியருக்கும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குமிடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்று பத்து வருட கால தவணைக்கு ஏற்பட்டது. திருமக்காவிற்குள் செல்லாமல் குர்பானியை ஹுதைபிய்யாவில் அறுத்து விட்டு இஹ்ராமை முறித்து விட்டு திரு மதீனாவிற்கு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திரும்பி விட்டார்கள். ஸஹாபிகளில் ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களைத் தவிர்த்து மற்றைய ஸஹாபிகள் அத்தனை பேருக்கும் உம்ராச் செய்யாமலும் திருமக்காவிற்குள் நுழையாமல் திரும்பச் செல்ல நேர்ந்ததையும் குறித்து மிகவும் கவலை. இவ்வுடன்படிக்கை நிபந்தனைகள் குறைஷியருக்கு சாதகமாகவும் முஸ்லிம்களுக்கு பாதகமாகவும் இருப்பதாகவே அவர்கள் கருதி சோர்வு அடைந்தனர். இந்த நிலையில் திரு மதீனாவை நோக்கி திரும்ப வரும் போது வழியில் ஒரு இரவில் இந்த சூரத்து அருளப்பட்டது. அப்பொழுது மேற்கண்ட ஹதீஸை ஸஹாபிகளுக்கு பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறிவித்தார்கள். இஹ்ராம் கட்டி வந்த நாம் திருமக்காவிற்குள் நுழையாமலும் உம்ராச்



செய்யாமலும் திரும்பச் செல்வதை சந்தேகத்திற்கு இடமில்லாதவாறு 'தெளிவான வெற்றி' என்று இறைவன் அறிவிக்கிறான். வெளித் தோற்றத்தில் பெருந்தோல்வி போல் தோன்றுகிறதே. இதன் மர்மம் புரியவில்லையே என்று அநேக ஸஹாபிகள் கருதினர். போகப்போக புரியும் என்று சமாதானம் கூறப்பட்டது. இவ்வுடன்படிக்கை ஏற்பட்ட இரண்டு வருட காலத்தில் திருமக்கா பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் எதிர்ப்பின்றி பணிந்தது. இறைவனுக்கு நன்றி செலுத்தும் முறையில் தக்பீர் முழக்கத்துடன் ஒட்டகையின் மீது அமர்ந்தவாறு சுஜூது செய்யும் பாவனையில் சிரந்தாழ்த்திய வண்ணம் பத்தாயிரம் புனிதர்களான ஸஹாபிகளுடன் திருகஃபாவிற்கு வந்து சேர்ந்தார்கள். அப்பொழுதுதான் ஸஹாபா பெருமக்களுக்கு இந்த சூரத்தில் கூறப்பட்ட 'தெளிவான வெற்றி' என்பதன் இரகசியம் புரிந்தது. இதனைக் குறித்த விபரத்தை எம்மால் எழுதப்பட்ட **ஹளரத் முஹம்மது ரசூலுல்லாஹி** ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்னும் நூலிலும் **தஜ்ரீதுல் ஜாமிஇஸ் ஸஹீஹில் புகாரீ** தமிழ் மொழி பெயர்ப்பிலும், **தப்ஸீருல் ஹமீத் ஃபீ தஃப்ஸீரில் குர்ஆனில் மஜீத்** என்னும் தமிழ் தஃப்ஸீரிலும் காணலாம்.

ஹுதைபிய்யா உடன்படிக்கையின் போது அது தோல்வி என்று புறத்தில் தோன்றியும் கூட எந்த ஸஹாபியும் கட்டுப் பாட்டையும் கடமையையும் கண்ணியத்தையும் மீறாமல் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அவர்கள் யாவரும் பணிந்ததை பாராட்டும் விதமாக, அவர்களைக் குறித்து.

اخرج احمد ومسلم عن جابر رضى الله تعالى عنه قال قال رسول الله

صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ لَنْ يَدْخُلَ النَّارَ رَجُلٌ شَهِدَ بَدْرًا اَوِ الْحُدَيْبِيَّةَ

"பத்ர் (போர்) அல்லது ஹுதைபிய்யாவில் (நிகழ்ந்த பைஅத்துர் ரிள்வானில்) கலந்து கொண்ட ஆடவர் எவரும் நரகம் புகவே மாட்டார்கள்" என்று ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் என்று ஜாபிருப்னு அப்தில்லாஹ் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அறிவித்து ள்ளார்கள். **(நூல் முஸ்லிம், அஹ்மத்)**

பத்ருப் போர்தான் இஸ்லாமில் ஏற்பட்ட முதல் போர். அதில் கலந்து கொண்ட ஸஹாபிகள் முன்னூற்றுப் பதின்மூவரே. இவர்களிடம் போருக்குரிய கருவிகளோ இதர தளவாடங்களோ சாதனங்களோ இல்லை. பகைவர் ஒரு ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள். பூரண யுத்த ஆயத்தங்களுடன் வந்தவர்கள். பத்ரில் போர் செய்த ஸஹாபிகள் உயிரைப் பணயமாக வைத்துப் போரிட்டனர். ஹுதைபிய்யாவில் பைஅத்துர் ரிள்வானில் கலந்து கொண்டவர்கள் போருக்காக வந்தவர்களல்லர். உம்ராச் செய்வதற்காக இஹ்ராம் கட்டிக் கொண்டு வந்தவர்கள். அங்கு போர் மூண்டால் பகைவர்கள் ஆயிரக்கணக்கில் இருப்பர். அவர்களுக்கு பின்பலமும் ஏராளமாக வரும். திருமக்காவின் அருகில் இந்த இடம் இருந்ததால் முஸ்லிம்கள் சுற்றி வளைக்கப்படும் சாத்தியமும் தப்பிச் செல்வதற்கு வாய்ப்பின் மையும் இருந்தது. இங்கு பைஅத்து என்னும் போர் பிரமாணம் செய்தவர்களும் உயிரைப் பணயமாகவே வைத்தனர். ஆதலால், இவ்விரண்டிலும் கலந்து கொண்டவர்களின் எண்ணம் உயிர் போனாலும் போகட்டும். இஸ்லாம் நிலைக்க வேண்டும்



என்பதாகவே இருந்தது. ஆதலால்தான் "அவர்கள் நரகில் நுழையவே மாட்டார்கள்" என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டுக் கூறியிருக்கிறார்கள்.

சூரத்துல் ஃபத்தஹ் என்ற இந்த சூரத்தில் ஹுதைபிய் யாவைக் குறித்த செய்திகள் முழுக்க முழுக்க இருக்கின்றன. விரிவான விபரந்தெரிய விரும்புவோர். மேலே எழுதப்பட்டிருக்கிற **தஃப்ஸீர்**, புகாரியின் மொழிபெயர்ப்பு, **ஹளரத் முஹம்மது ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்** அவர்களின் சரித்திரம் ஆகிய மூன்று தமிழ் நூல்களிலும் காணலாம்.

1. ரிவாயத்து:- ரமலான் மாதத்து பிறையைக் கண்டவுடன் மஃரிபில் ஃபர்லு சுன்னத்து தொழுகைக்குப் பிறகு இரண்டு ரக்கஅத்து நஃபில் தொழ வேண்டும். இரண்டு ரக்கஅத்திலும் சூரத்துல் ஃபாத்திஹாவிற்குப் பிறகு சூரத்துல் ஃபத்தஹ் என்ற இந்த சூரத்தை ஓதி ஸலாம் கொடுத்து தொழுகையை பூர்த்தி செய்தால் அந்த வருடம் முழுவதிலும் அல்லாஹுதஆலாவின் பாதுகாப்பும் உதவியும் கிடைக்கும். அவருக்கு செல்வம் பெருகும்.

2. ரிவாயத்து:- தினந்தோறும் இந்த சூரத்தை தவறாமல் நிரந்தரமாக ஒருவர் ஓதினால் அவர் கனவில் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைச் சந்தித்து பைஅத்துச் செய்வார். இம்மை மறுமை ஆகிய இரண்டின் பேறுகளையும் அடைவார். பலஹீனர் ஓதினால் பலமடைவார். மதிப்பிழந்தவர் ஓதினால் செல்வாக்குப் பெறுவார். கடன்காரர் ஓதினால் கடனைத் தீர்த்து விடுவார். சிறையிலிருப்பவர் ஓதினால் விடுதலை பெறுவார் இன்ஷா அல்லாஹுதஆலா.

**3. ரிவாயத்து:-** பயங்கரமான துன்பங்களை அகற்ற இந்த சூரத்தை இருபத்து ஒரு முறை அல்லது நாற்பது முறை மூன்று நாட்கள் அல்லது ஐந்து நாட்கள் அல்லது ஏழு நாட்கள் தொடர்ந்து ஓதி துஆச் செய்யவேண்டும். இன்ஷா அல்லாஹு தஆலா துன்பம் துடைக்கப்படும்.

**4. ரிவாயத்து:-** ஜும்ஆவுடைய ஃபர்லு சுன்னத்து களுக்குப் பிறகு இந்த சூரத்தை ஏழு முறை ஓதி விட்டு **யா ஃபத்தாஹ்** என்று நானூற்று எண்பத்து ஒன்பது முறை ஓதி துஆச் செய்ய வேண்டும். இவ்வாறு மறு ஜும்ஆ வரையில் தினந்தோறும் லுஹருடைய வேளையில் ஃபர்லு சுன்னத்து களுக்குப் பிறகு இதே முறையில் ஓதித் துஆச் செய்ய வேண்டும். இடையில் யாருடனும் பேசலாகாது. தொடர்ந்து ஓத வேண்டும். இப்படிச் செய்தால் நாட்டம் நிறைவேறும் என இமாம் பக்ருத்தீன் ராஜீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் அறிவித்துள் ளார்கள்.

## சூரத்துல் வாக்கிஆ

قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مَنْ قَرَأَ سُوْرَةَ الْوَاقِعَةِ كُلَّ لَيْلَةٍ
لَمْ تُصِبْهُ فَاقَةٌ اَبَدًا قَالَ سَعْدُ الْمُفْتِى هُوَ حَدِيْثٌ صَحِيْحٌ وَفِيْ
حَدِيْث آخَرَ مَنْ دَاوَمَ عَلَى قِرَاْءَةِ سُوْرَةِ الْوَاقِعَةِ لَمْ يَفْتَقِرْ اَبَــدًا.

"எவர் சூரத்துல் வாக்கிஆவை ஒவ்வொரு இரவிலும் ஓதுகிறாரோ அவருக்கு ஒருபோதும் பட்டினி ஏற்படாது" என்று பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.



"உணவு சம்பந்தமான கஷ்டம் ஏற்படுகிற வேளையில் இந்த சூரத்தை ஓத வேண்டுமென" இமாம் கஸ்ஸாலீ ரஹ்மத் துல்லாஹி அலைஹி அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

**ஹதீஸ்:-** சூரத்துல் வாக்கிஆவை ஒவ்வொரு இரவிலும் ஓதுபவருக்கு ஒரு போதும் வறுமை வராது.

**குறிப்பு:-** இது ஸஹீஹான ஹதீஸ் என்று ஸஃதுனில் முஃப்தி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறியுள் ளார்கள். மஃரிபுக்கும் இஷாவிற்கும் இடையில் இந்த சூரத்தை ஓதுவது சிறந்தது.

**ஹதீஸ்:-** "சூரத்துல் வாக்கிஆவை எவர் நிரந்தரமாக தினசரி ஓதுகிறாரோ அவர் வறுமையால் ஒரு போதும் வதங்க மாட்டார்".

واخرج ابو عبيد والحرث وابو يعلى وابن مردويه والبيهقي عَنْ اَبْنِ
مَسْعُوْد رَضِيَ اللهُ تَعَالَى عَنْهُ قَالَ سَمِعْتُ رَسُوْلَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ
وَسَلَّمَ يَقُوْلُ مَنْ قَرَأَ سُوْرَةَ الْوَاقِعَةِ كُلَّ لَيْلَةٍ لَمْ تُصِبْهُ فَاقَةٌ وَسُــوْرَةُ
الْوَاقِعَةِ سُوْرَةُ الْغِنَى فَاقْرَأُوْهَا وَعَلِّمُوْهَا اَوْلَادَكُمْ

**ஹதீஸ்:-** "ஒவ்வொரு இரவிலும் சூரத்துல் வாக்கிஆவை ஓதுபவருக்கு பஞ்சம் ஒரு போதும் வராது. சூரத்துல் வாக்கிஆ செல்வச் செழிப்பை உண்டு பண்ணும் சூரத்து. அதனை நீங்களும் ஓதுங்கள். உங்கள் மக்களுக்கும் கற்றுக் கொடுங்கள்" என்று ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூற நான் செவியுற்றேன் என்று இப்னு மஸ்ஊத் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

இந்த ஹதீஸின்படி ஹளரத் இப்னு மஸ்ஊத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ஓதினார்கள். தங்களுடைய புதல்வி களுக்கு இந்த சூரத்தை கற்றுக் கொடுத்து அவர்களையும் ஓதச் செய்தார்கள் என்பது சரித்திரங்களில் பல இடங்களிலும் கூறப்பட்டிருக்கிறது.

## பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை கனவில் காண

اخرج البخاري عَنْ اَبِيْ هُرَيْرَةَ رَضِىَ اللهُ تعَالَى عَنْهُ قَال قَالَ رَسُوْلُ اللهِ
صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ لَمْ يَبْقَ من النُّبُوَّة الاَّ الْمُبشَرَات قَالُوْا وَمَا الْمُبَشَّـرَاتُ
قَالَ الرُّؤْيَا الصَّالِحَةُ وَزَادَ مَالِكٌ فِيْ رِوَايَةِ عطَاءبْنِ يَسَارٍ رَضِىَ اللهُ تَعَـالَى
عَنْهُمَا يَرَاهَا الرَّجُلُ الْمُسْلِمُ اَوْ تُرَي لَهُ

"நபித்துவத்தில் முபஷ்ஷராத்துகளைத் தவிர்த்து வேறு எதுவும் எஞ்சி இருக்கவில்லை" என்று ரசூலுல்லாஹி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். "முபஷ்ராத்து என்றால் என்ன" என்று (ஸஹாபிகள்) விசாரித்தார்கள். "நல்ல கனவு" என்று பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

இந்த ஹதீஸ் ஹளரத் அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களால் அறிவிக்கப்பட்டது என்பதாக **புகாரி இமாம்** குறிப்பிட்டுள்ளார்.

அத்தாஉப்னு யஸார் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களுடைய ரிவாயத்தில் மேற்கண்ட செய்தியுடன்



"முஸ்லிமானவர் நல்ல கனவைக் காண்பார் அல்லது (பிறரைக் குறித்து) அவருக்குக் காட்டப்படும்" என்றும் இருக்கிறது.

عَنْ اَبِيْ هُرَيْرَةَ رَضِيَ اللهُ تعَالَى عَنْهُ اَنَّ رَسُوْلَ اللهِ صَلَّى اللهُ
عَلَيْهِ وَسَلَّمَ قَالَ مَنْ رَآنِىْ فِى الْمَنَامِ فَقَدْ رَآنِيْ اَيْ قَدْ
رَآي مِثَالِيْ فَاِنَّ الشَّيْطَانَ لاَ يَتَمَثَّلُ بِيْ

"என்னை எவர் கனவில் பார்த்தாரோ அவர் என்னைத்தான் பார்த்தார். (அதாவது எனது மிதாலைப் பார்த்தார்) ஷைத்தான் என்னைப் போல் தோன்ற மாட்டான்" என்று ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஹளரத் அபூஹுரைரா ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

குறிப்பு:- ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் ஏனைய நபிமார்களையும் ஒலிமார் களையும் நல்லோர் பெரியோர்களையும் உறவினர்களையும் கனவில் காண்பதும் அவர்களுடன் உரையாடுவதும் சகஜம். இவர்களைக் காண்பதானது இவ்வுலகில் அவர்கள் வாழ்ந்த போது அணிந்திருந்த பூத உடலைக் கண்டதாகவோ உயிரைக் கண்டதாகவோ கொள்ளலாகாது. அவர்களுடைய உருவத்தின் பிரதி பிம்பத்தைத்தான் காண்பர். ஷைத்தான் வழி கெடுக்கும் நோக்கத்தில் மேற்கண்ட உருவத்தில் கனவிலும் தோன்றுவான். ஆயினும். நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய உருவத்திலோ ஏனைய நபிமார்களின் உருவத் திலோ தோன்ற அவனுக்கு சக்தி இல்லை. மற்றவர்களின் உருவத்தில் தோன்றி வழி தவறச் செய்ய முடியும். ஆகவே.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கண்டதாக உறுதியாக நம்பவேண்டும். தாய் தந்தை உருவத்திலும் தோன்ற மாட்டான் என்றும் சொல்லப்படுகிறது.

عَنْ ابِيْ هُرَيْرَةَ رَضِىَ اللهُ تَعَالَى عَنْهُ قَالَ قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْه

وَ سَلَّمَ مَنْ رَآنِيْ فِي الْمَنَامِ فَسَيَرَانِيْ فِى الْيَقْظَةِ وَلَا يَتَمَثَّلُ الشَّيْطَانُ بِيْ

"என்னை எவர் கனவில் பார்த்தாரோ அவர் பின்னர் என்னை விழிப்பில் பார்ப்பார். ஷைத்தான் என்னைப் போல் தோன்ற மாட்டான்" என்று ரசூலுல்லாஹி அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் என்று ஹளரத் அபூஹுரைரா ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

குறிப்பு:- இந்த உலகில் வாழ்பவர் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கனவில் பார்த்தால் மறு உலகில் அவர்களை நேரில் சந்திப்பார் என்பது ஹதீஸின் கருத்து.

## சில வணக்கங்கள்

1. ஜும்ஆவின் இரவில் இரண்டு ரக்கஅத்துகள் தொழ வேண்டும். ஒவ்வொரு ரக்கஅத்திலும் சூரத்துல் ஃபாத்திஹா விற்குப் பிறகு ஆயத்துல் குர்ஸீயை பதினைந்து தடவை ஓதித் தொழுகையைப் பூர்த்தி செய்ய வேண்டும். தொழுகை முடிந்த பின்னர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஆயிரம் ஸலவாத்து ஓதி துஆச் செய்ய வேண்டும். இப்படித் தொழுது எவரிடத்திலும் பேசாமல் தூங்கினால் இன்ஷா அல்லாஹுத்தஆலா பெருமானாரைக் கனவில் பார்க்கலாம்.



நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை எவர் கனவில் பார்க்கிறாரோ அவர் ஈமானுடன் மரணிப்பார். அவருக்கு ஷஃபாஅத்துக் கிடைக்கும். அவருக்கு சுவர்க்கம் உண்டு. அவரையும் அவருடைய பெற்றோர்கள் முஸ்லிம்களாக இருப்பின் அவர்களையும் அல்லாஹுதஆலா மன்னிப்பான். அவருக்கு மரண வேதனை இலேசாக இருக்கும். கப்ருடைய வேதனை அவருக்கு அகற்றப்படும். இறுதி நாளின் அமளிகளை விட்டு அச்சந் தீர்ந்திருப்பார். இம்மை மறுமை இரண்டிலும் அவருடைய தேவைகள் நிறைவேறும் **(கித்தாபுல் அத்கார்).**

2. "ஜும்ஆவுடைய இரவில் ஒவ்வொரு ரக்கஅத்திலும் சூரத்துல் ஃபாத்திஹாவிற்குப் பிறகு ஆயத்துல் குர்ஸீ ஒரு முறை, சூரத்துல் இக்லாஸ் பதினைந்து முறை ஓதி இரண்டு ரக்கஅத்து நஃபில் தொழுது ஸலாம் கொடுத்த பின்னர் ஆயிரம் முறை என் மீது ஸலவாத்து ஓதினால் அதே இரவில் என்னை கனவில் பார்க்கத் தவறினால் ஒரு ஜும்ஆவிற்குள் காண்பார்" என்று ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஹளரத் அபூஹுரைரா ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் அறிவித்துள் ளார்கள் என்று **ஹதாயிக்குல் அக்பார்** என்ற நூலில் எழுதப்பட்டிருக்கிறது.

3. "வெள்ளிக்கிழமை இரவில் குளித்து தூய உடை யணிந்து ஒவ்வொரு ரக்கஅத்திலும் சூரத்துல் ஃபாத்திஹாவிற்குப் பிறகு குல்ஹுவல்லாஹு சூரத்து ஆயிரம் தடவை ஓதி இரண்டு ரக்கஅத்துகள் தொழுதால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கனவில் காணலாம்" என்பதாக ஸுயூத்தி இமாம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

4. "என்னை கனவில் காண விரும்புபவர் ஜும்ஆவுடைய இரவில் நான்கு ரக்அத்துகளை இரண்டு ஸலாமில் ஒவ்வொரு ரக்அத்திலும் சூரத்துல் ஃபாத்திஹாவிற்குப் பின்னர் வல்லுஹா வல்லைலி, அலம்நஷ்ரஹ், இன்னாஅன்ஜல்னாஹு, இதாஸுல் ஜிலத்தில் அர்லு சூரத்துகளை ஓதி தொழுகையைப் பூர்த்தி செய்து, என் மீது எழுபது முறை ஸலவாத்தை ஓதி, இஸ்திஃபாரையும் எழுபது முறை ஓதி முடித்து, ஸலவாத்து ஓதிய வண்ணம் தூங்கினால் என்னை கனவில் காண்பார்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருப்பதாக **மஜ்மஉல் ஹதீஸ்** என்ற நூலில் எழுதப்பட்டிருக்கிறது.

5. "ஜும்ஆவுடைய நாளில் சூரத்துல் கத்ரை ஆயிரம் முறை ஓதுவதைப் பழக்கமாக்கிக் கொண்டால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை கனவில் காணாமல் மரணிக்க மாட்டார்" என்று ஆலிம்கள் கூறியிருக்கிறார்கள்.

6. "வெள்ளிக்கிழமை இரவில் சூரத்துல் கௌதரை ஆயிரம் தடவை ஓதி விட்டு ஆயிரம் தடவை ஸலவாத்து ஓதித் தூங்கினால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை கனவில் காணலாம்" என்று அறிஞர்கள் கூறி இருப்பதாக **வாஸ்ஸுல் குர்ஆனில்** கூறப்பட்டிருக்கிறது.

7. "சூரத்துல் இக்லாஸை ஆயிரம் தடவை ஓதி அன்னை கதீஜா ரலியல்லாஹுதஆலா அன்ஹா அவர்களுக்கும், மற்றொரு ஆயிரம் தடவை ஓதி அன்னை ஆயிஷா ஸித்தீக்கா ரலியல்லாஹு தஆலா அன்ஹா அவர்களுக்கும் இன்னொரு ஆயிரம் தடவை ஓதி ஸித்தி ஃபாத்திமா ரலியல்லாஹுதஆலா அன்ஹா அவர்களுக்கும் ஈஸால் தவாபு செய்து விட்டு ஜும்ஆவின் இரவில் اسْتَغْفِرُ الله واتُوبُ اليه



என்று ஆயிரம் முறை இஸ்திஃபார் செய்து.

اَلصَّلٰوةُ وَالسَّلَامُ عَلَيْكَ يَا سَيِّدِيْ يَا رَسُوْلَ الله خُذْ بِيَدِيْ قَلَّتْ حِيْلَتِىْ اَدْرِكْنِيْ

என்ற ஸலவாத்தை ஆயிரம் தடவை ஓதி முடித்து. "நாயனே! எனது ஆன்மாவை ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய ஆன்மாவில் இணைத்து உம்மஹாத்துல் முஃமினீன்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் பழகியது போல நானும் கண்டு களிக்க உதவி செய்வாயாக" என்று துஆச் செய்தால் இன்ஷா அல்லாஹு தஆலா பெருமானாரைக் கனவில் காணலாம்.

மேற்கண்ட விர்துகள் யாவும் கை கண்டவை. ஆனால், இவற்றை ஓதுபவர் பிழையின்றி மன ஓர்மையுடன் ஓத வேண்டும். பாவஞ் செய்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். பின்னர் இறைவனிடம் இஸ்திஃபார் செய்து விட்டு இந்த அமல்களைச் செய்வதுடன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை கனவில் காண்பதற்கு தகுதியாளராக ஆக்கிக் கொள்ள வேண்டும். ஒரே தடவையில் இவற்றை ஓதி முடித்தவுடன் தமக்குத் தகுதி வந்து விட்டதாக கருதலாகாது. பல முறை விடாமுயற்சியாக இந்த அமல்களைச் செய்ய வேண்டும்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நேரில் சந்திக்க இயலாவிடினும் கனவிலாவது சந்திக்கும் பாக்கியத்தை எல்லா முஸ்லிம்களுக்கும் தந்தருள் வானாக வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

وَصَلَّى اللهُ تَعَالَى وَسَلَّمَ عَلَى خَيْرِ خَلْقِهِ سَيِّدِنَا وَنَبِيِّنَا وَمَوْلَانَا مُحَمَّدٍ

وَعَلَى اٰلِهِ وَصَحْبِهِ اَجْمَعِيْنَ وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ

## ஆயத்துல் குர்ஸீயின் சிறப்புகள்:-

1. நான் பேரீத்தம் பழம் வாங்குவதற்காக பஸரா என்ற நகருக்குச் சென்றேன். என்னுடைய சரக்குகளுடன் தங்கு வதற்குத் தகுந்த வீடு கிடைக்கவில்லை. கடைசியாக ஒரு வீட்டைக் கண்டேன். அதில் (மனித வாசம் இல்லாததால்) சிலந்திப் பூச்சியின் வலையாகிய நூலாம்படை பற்றி இருந்தது. "இந்த வீடு ஏன் இப்படி இருக்கிறது" என்று வினவினேன். "அந்த வீட்டில் பேய் குடி இருக்கிறது" என்று கூறினார்கள். அந்த வீட்டிற்கு சொந்தக் காரரிடம் சென்று "உமது வீட்டை எனக்கு வாடகைக்கு தருகிறீர்களா?" என்று வினவினேன். அதற்கவர் "உன் உயிரைக் காப்பாற்றிக் கொள். அதில் ஒரு இப்ரீத் (முரட்டு பைசாசம்) இருக்கிறது. அதனை தனது குடியிருப்பாக ஆக்கிக் கொண்டது.

அவ்வீட்டிற்கு குடிவருகிற ஒவ்வொரு வரையும் அது கொன்று விடுகிறது" என்று கூறினார். 'அதனை எனக்கு வாடகைக்குத் தாரும். என்னை அந்த இப்ரீத்துடன் விட்டுவிடும். அதனை வெல்ல அல்லாஹு தஆலா எனக்கு உதவி புரிவான் என்று கூறினேன். அதற்கவர் "அதனையும் உம்மையும் விட்டு விட்டேன்" என்று கூறினார். (அதாவது அவ்வீட்டை எனக்கு வாடகைக்குத் தந்தார்) அதில் நான் குடியேறினேன்.



நல்ல விதமாக இருள் சூழ்ந்த போது கன்னங்கரேலென்ற ஒரு கருப்பு மனிதர் என்னிடம் வந்தார். அவருடைய கண்கள் இரண்டும் நெருப்பு ஜுவாலையைப் போல் இருந்தன. அது இருளாக இருந்தது. என் அருகில் அது நெருங்கிற்று. அப்பொழுது நான் "அல்லாஹு லாஇலாஹ இல்லாஹுவல்ஹையுல் கய்யும்" என்ற ஆயத்தை ஓதத் தொடங்கினேன். நான் அதை ஓத ஓத அதுவும் என்னுடம் சேர்ந்து ஒவ்வொரு வார்த்தையாகச் சொல்லிக் கொண்டே இருந்தது. وَلَا يَئُودُهُ حِفْظُهُمَا وَهُوَ الْعَلِيُّ الْعَظِيمُ என்று நான் ஓதிய போது அது ஓதவில்லை. அதனையே நான் மடக்கி மடக்கி ஓதினேன். பின்னர் அந்த இருள் நீங்கிவிட்டது. நான் அந்த வீட்டின் ஒரு மூலையில் சென்று படுத்து உறங்கி விட்டேன். காலையில் நான் எழுந்த போது அந்த வீட்டில் சுட்டெரிந்த சாம்பலைப் பார்த்தேன். நீர் ஒரு பெரிய இப்ரீத்தை சுட்டெரித்து விட்டீர் என்ற அசரீரி கூறச் செவியேற்றேன். 'எதனால் நான் சுட்டெரித்தேன்' என்று வினவினேன். அதற்கு وَلَا يَئُودُهُ حِفْظُهُمَا وَهُوَ الْعَلِيُّ الْعَظِيمُ என்ற வாசகத்தால் எரித்தீர்" என்று பதில் கிடைத்தது என்பதாக பனூ கஃப் கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு மனிதர் தம்மிடம் கூறியதாக இப்னு குத்தைபா ரஹ்மத்துல்லாஹி அலைஹி அறிவித்திருப்பதாக

இமாம் கஸ்ஸாலீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் இயற்றி **கவாஸ்ஸுல் குர்ஆன்** என்ற நூலில் எழுதப்பட்டிருக்கிறது.

2. மஆதுப்னு ஜபல் ரலியல்லாஹு தஆலாஅன்ஹு அவர்கள் அறிவிப்பது. ஸதக்காவுக்காக வசூல் செய்யப்பட்ட பேரீத்தம் பழத்தை பாதுகாக்குமாறு என்னிடத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒப்புவித்தார்கள். அதனை நான் எனது வீட்டு மாடத்தில் வைத்திருந்தேன். ஒவ்வொரு நாளிலும் அதில் கொஞ்சங் கொஞ்சம் குறைவதை நான் கண்டேன். இதனைக் குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு தகவல் தெரிவித்தேன். 'அது ஷைத்தானுடைய வேலை நீர் காத்திருந்து பாரும்' என்று பதிலளித்தார்கள். நான் தூங்காமல் விழித்திருந்து காவல் புரிந்து கொண்டிருந்தேன். நடு இரவில் யானையுடைய உருவம் ஒன்று என்னை நோக்கி வந்தது. தலைவாசலுக்குப் பக்கத்தில் வந்ததும் அந்த உருவத்தை விட்டு மாறி வேறு ஒரு உருவத்தில் தலைவாசலுக்குள் நுழைந்தது. பேரீத்தம் பழம் இருக்கிற இடத்திற்குச் சென்று அதனை வாரத் தொடங்கிற்று. நான் ஆடையை நன்கு இருகக் கட்டிக் கொண்டு பேரீத்தம் பழத்திற்கும் அந்த ஷைத்தானுக்கும் மத்தியில் சென்று "அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரசூலுஹு. அல்லாஹ்வுடைய விரோதியே! ஸதக்காவுடைய பேரீத்தம் பழத்தை எடுக்காதே என்று கூறி அவனது கையைப் பிடித்துக் கொண்டேன். அதனை அடைவதற்கு உன்னைப் பார்க்கினும் அவர்கள் (அதாவது ஏழை மக்கள்) அதிக அருகதையுள்ளவர்கள். உன்னை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் கொண்டு போய் அவமானப் படுத்துவேன்" என்றேன்.



இனிமேல் வருவதில்லை என்று என்னிடம் உறுதி கூறிற்று. (நான் விட்டு விட்டேன்) பின்னர் (மறுநாள்) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் சென்றேன். "உமது கைதி என்ன செய்தான்" என்று வினவினார்கள். இனிமேல் வருவதில்லை என்று என்னிடம் உறுதி கூறினான். அவனை விட்டு விட்டேன் என்றுரைத்தேன். அப்பொழுது, "அவன் மீண்டும் வருவான் நன்றாக எதிர்பாரும்" என்றார்கள். இரண்டாவது இரவிலும் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தேன். முன்போலவே அவன் செய்தான். நானும் முன்போலவே செய்தேன். இனிமேல் வருவதில்லை" என்று உறுதி கூறினான். அவனை விட்டு விட்டேன். பின்னர் (மறுநாள்) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் சென்று நடந்த விஷயத்தைத் தெரிவித்தேன். அதற்கவர்கள் "அவன் மீண்டும் வருவான். காத்திருந்து எதிர்பாரும்" என்றார்கள்.

மூன்றாவது இரவிலும் காத்திருந்தேன். எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். அவன் வந்து முன்போலவே செய்தான். "அல்லாஹ்வின் விரோதியே! உன்னை இருமுறை விட்டு விட்டேன். இது மூன்றாவது முறை" என்றேன். நான் பிள்ளை குட்டிக் காரன். நஸீபினிலிருந்து வருகிறேன். வேறு எங்கேனும் எதாவது கிடைக்குமென்றிருந்தால் நான் இங்கு வந்து இருக்கவே மாட்டேன். உங்களுடைய இந்த மதீனாவில்தான் நாங்கள் இருந்து கொண்டிருந்தோம். உங்களுடைய தோழர் நபியாக அனுப்பப்பட்டார். அவருக்கு இரண்டு ஆயத்துகள் அருளப்பட்டன. உடனே நாங்கள் இந்த ஊரை விட்டு ஓடி நஸீபீனில் குடியேறி விட்டோம். அவ்விரு ஆயத்துகளும் எந்த வீட்டில் ஓதப்படு கின்றனவோ அந்த வீட்டில் ஷைத்தான் நுழைய மாட்டான்.

என்னை நீர் விடுவித்தால் உமக்கு அவ்விரண்டு ஆயத்து களையும் அறிவிப்பேன்'' என்றான். நல்லது என்று நான் சம்மதித்தேன். ஆயத்துல் குர்ஸீயும் சூரத்துல் பக்கராவின் கடைசி ஆயத்தும்தான் அவைகள்'' என்றான். அவனை நான் விடுதலை செய்தேன்.

பின்னர் (மறுநாள்) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் அவன் கூறியதைச் சொன்னேன். அந்த கபீது பொய்யுரைப்பவன்தான். எனினும் இதில் உண்மை யுரைத்தான் என்றார்கள். அன்று முதல் அவ்விரு ஆயத்து களையும் நான் ஓதிக் கொண்டிருந்தேன். பேரீச்சம்பழங்கள் குறைவதை நான் கண்டதில்லை.

இந்தச் செய்தியை தப்ரானி, அல்ஹாக்கிம், அபூநயீம், அல்பைஹக்கி ரஹ்மத்துல்லாஹி அலைஹிம் ஆகிய இமாம்கள் தங்கள் நூல்களில் எழுதி இருக்கின்றனர். இதுபோன்ற சம்பவங்கள் இதர ஸஹாபிகளுக்கும் நிகழ்ந்திருக்கின்றன.

3. **"ஒவ்வொரு ஃபர்லான தொழுகைக்கும் பின்னர் ஆயத்துல் குர்ஸீயை ஓதுபவர் சுவர்க்கத்தில் நுழைவதை விட்டு மரணத்தைத் தவிர்த்து வேறுதடை இல்லை. (ஒவ்வொரு ஃபர்லுக்கும் பிறகு ஆயத்துல் குர்ஸீயை தவறாமல் ஓதுபவர் சுவர்க்கவாதி. இவ்வுலகில் வாழும் பொழுது நேரடியாக சுவர்க்கத்தில் நுழைய இயலாது. அவர் மரணிக்க வேண்டும். அவர் மரணிக்காமல் இருப்பதுதான் தடையாக இருக்கிறது என்பது கருத்து). ஸித்தீக்கு அல்லது ஆபிது ஆகியோரைத் தவிர வேறெவரும் இதனைத் (தவறாமல்) தொடர்ந்து ஓத இயலாது. படுக்கும் போது எவர் இதனை ஓதுகிறாரோ அவருடைய**



**உயிரையும் அவர் அயலகத்தாரையும், அவருடைய அயலகத்தாரின் அயலகத்தாரையும் அவரைச் சுற்றியுள்ள வீடுகளையும் அல்லாஹ் அச்சந்தீர்ந்தவராக ஆக்குகிறான்'' என்று உங்களுடைய நபி மின்பரின் கம்புகளின் சாய்ந்து கொண்டு கூறுவதை நான் செவியேற்றேன்** என்று அபூதாலிபின் புதல்வரான அலீ கர்ரமல்லாஹு வஜ்ஹஹு ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கூறியதாக ரிவாயத்துச் செய்யப் பட்டிருக்கிறது. (தஃப்ஸீர் ரூஹுல் பயான்).

4. அறிவும் விவேகமும் அதிகமாகுவதற்காக ஆயத்துல் குர்ஸீயை அதன் வார்த்தைகளின் எண்ணிக்கையாகிய ஐம்பது தடவை ஓதி மழைத் தண்ணீரில் ஊதிக் குடித்தால் அறிவும் விவேகமும் அதிகமாகும். தினந்தோறும் இதே எண்ணிக்கையில் அதனை ஓதி வருபவர் தம்முடைய நாட்டத்தை அடைவார். தம்முடைய கோரிக்கையை சந்தேகமின்றி பெற்றுக் கொள்வார் என்று அஷ்ஷெய்கு அபுல் அப்பாஸில் பூனி ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறியுள்ளார்.

5. அடியான் தன் வீட்டை விட்டுப் புறப்படும் போது ஆயத்துல் குர்ஸீயை அதனுடைய ஃபஸ்லு(ஆயத்தின் முடிவுகளின்) களின் எண்ணிக்கைப்படி ஓதினால் அவர் திரும்பவும் தமது வீட்டிற்கு வந்து சேரும் வரையில் அவருக்கு அது இருக்கும். இந்த ஆயத்தில் எத்தனை ஃபஸ்லுகள் இருக்கின்றன என்பதில் கருத்து ஒற்றுமை இல்லை. பதினேழு என்றும் பதினைந்து என்றும் ஐந்து என்றும் மூன்று விதமாகக் கூறியிருக் கிறார்கள். (அதிகப்படியான எண்ணிக்கையாகிய பதினேழு முறை ஓதுவதுதான் சிறந்தது. இந்த எண்ணிக்கையினுள் பதினைந்தும் ஐந்தும் அடங்கி இருப்பதால் எவருக்கும் ஆட்சேபணை இருக்க

முடியாது. ஆதலின் பதினேமு என்பதையே ஊர்ஜிதமாகக் கொள்ளவேண்டும்).

6. ஒவ்வொரு ஃபர்லான தொழுகைக்கும் பிறகு ஆயத்துல் குர்ஸீயை பதினேழு முறை நிரந்தரமாக ஓதிவந்தால் மேலுலகங் களிலும் கீழுலகங்களில் உள்ளோரிடம் விரும்பப் படுபவராக இருப்பார். அவருடைய சொல்லுக்கு செவிமடுக்கப் படும். அவருடைய செயல் ஏற்றுக் கொள்ளப்படும். பகைவர் அவரைக் கண்டு அஞ்சுவர். நண்பர்கள் நேசிப்பர். இதனை ஓதிவருங்கால மெல்லாம் அல்லாஹு தஆலாவின் அமானிதத்தில் (பொறுப்பில்) இருப்பார். இவ்விதமாக ஆயத்துல் குர்ஸீயின் கவாஸ்ஸில் எழுதப்பட்டிருக்கிறது.

7. ஃபர்லான ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னரும், காலையிலும், மாலையிலும், வீட்டிற்குள் நுழையும் போதும், வீட்டிலிருந்து வெளியேறும் போதும் தூங்கப் போகும் போதும், கடைத்தெருவுக்குச் செல்லும்போதும், பிரயாணத்திற்குப் புறப்படும் போதும் நிரந்தரமாக ஓதிக் கொண்டிருந்தால் ஷைத்தானின் வஸ்வாசையும் அரசர்களின் தீங்கையும், மனிதர்களின் தீங்கையும், கொடிய மிருகங்களின் தீங்கையும் விட்டு அல்லாஹு தஆலா காப்பாற்றுவான். அவரையும், அவர் சந்ததியினரையும் அவருடைய பொருள்களையும், பாதுகாப்பான், திருட்டு நெருப்பு, தண்ணீர் ஆகியவற்றை விட்டுக் காப்பாற்றுவான். உடலில் நோய்களில்லாமல் ஆரோக்கியத்தை நிரந்தர ஜீவியனின் பொருட்டால் பெற்றுக் கொள்வார். (கவாஸ்ஸுல் குர்ஆன்).

8. கொடுமையான ஆட்சியாளர்கள் அரசாங்க அதிகாரிகள் நீதிபதிகள் முதலியவர்களிடம் செல்வோர் அலுவலகத்திற்குள் நுழையும் போது ஆயத்துல் குர்ஸீயை ஓதிவிட்டு.



يَا حَيُّ يَا قَيُّوْمُ يَا بَدِيْعَ السَّمٰوَاتِ
وَالْاَرْضِ يَا ذَا الْجَلَالِ وَالْاِكْرَامِ اَسْئَلُكَ
بِحَقِّ هٰذِهِ الْاٰيَةِ الْكَرِيْمَةِ وَمَا فِيْهَا
مِنَ الْاَسْمَاءِ الْعَظِيْمَةِ اَنْ تُلْجِمَ فَاهُ عَنَّا
وَتُخْرِسَ لِسَانَهُ حَتّٰى لَا يَنْطِقُ اِلَّا بِخَيْرٍ
اَوْ يَصْمُتُ خَيْرُكَ يَا هٰذَا بَيْنَ
عَيْنَيْكَ وَشَرُّكَ تَحْتَ قَدَمَيْكَ

**யா ஹய்யுன் யா கய்யூம் யா பதீஅஸ்ஸமாவாத்தி வல்அர்ழி யாதல் ஜலாலி வல் இக்ராமி அஸ்அலுக பிஹக்கி ஹாதிஹில் ஆயத்தில் கரீமத்தி வமா ஃபீஹா மினல் அஸ்மாஇல் அழீமத்தி அன் துல்ஜிம ஃபாஹு அன்னா வதுக்ரிசு லிஸானஹு ஹத்தா லா என்திகு இல்லா பிகைரின் அவ் எஸ்முது ஹய்யருக யா ஹாதா பைன அய்னய்க வஷர்ருக தஹ்த கதமைக** என்று துஆச் செய்து விட்டு நீர் உள்ளே நுழையலாம். அல்லாஹு தஆலா அவருடைய வாய்க்கு கடிவாளத்தைப் போட்டு விடுவான். அவனது கிருபையால் எந்தக் கெடுதலும் நிகழாது.

9. பல் வலிக்கு بسم الله الرحمن الرحيم

اَوَلَمْ يَرَ الْاِنْسَانُ اَنَّا خَلَقْنٰهُ مِنْ نُّطْفَةٍ فَاِذَا هُوَ خَصِيْمٌ

مُّبِيْنٌ ۝ وَضَرَبَ لَنَا مَثَلًا وَّنَسِيَ خَلْقَهٗ ؕ قَالَ مَنْ يُّحْيِ
الْعِظَامَ وَهِيَ رَمِيْمٌ ۝ قُلْ يُحْيِيْهَا الَّذِيْٓ اَنْشَاَهَآ
اَوَّلَ مَرَّةٍ ؕ وَهُوَ بِكُلِّ خَلْقٍ عَلِيْمُ ۝ الَّذِيْ جَعَلَ لَكُمْ
مِّنَ الشَّجَرِ الْاَخْضَرِ نَارًا فَاِذَآ اَنْتُمْ مِّنْهُ تُوْقِدُوْنَ ۝
اَوَلَيْسَ الَّذِيْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ بِقٰدِرٍ عَلٰٓى
اَنْ يَّخْلُقَ مِثْلَهُمْ ؕ بَلٰى وَهُوَ الْخَلّٰقُ الْعَلِيْمُ ۝ اِنَّمَآ اَمْرُهٗٓ
اِذَآ اَرَادَ شَيْـًٔا اَنْ يَّقُوْلَ لَهٗ كُنْ فَيَكُوْنُ ۝ فَسُبْحٰنَ
الَّذِيْ بِيَدِهٖ مَلَكُوْتُ كُلِّ شَيْءٍ وَّاِلَيْهِ تُرْجَعُوْنَ ۝

பின்னர்

اَللّٰهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَ ۚ اَلْحَيُّ الْقَيُّوْمُ ۚ لَا تَاْخُذُهٗ
سِنَةٌ وَّلَا نَوْمٌ ؕ لَهٗ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْاَرْضِ
مَنْ ذَا الَّذِيْ يَشْفَعُ عِنْدَهٗٓ اِلَّا بِاِذْنِهٖ ؕ يَعْلَمُ مَا
بَيْنَ اَيْدِيْهِمْ وَمَا خَلْفَهُمْ ۚ وَلَا يُحِيْطُوْنَ بِشَيْءٍ
مِّنْ عِلْمِهٖٓ اِلَّا بِمَا شَآءَ ۚ وَسِعَ كُرْسِيُّهُ السَّمٰوٰتِ



وَالْاَرْضَ ۚ وَلَا يَـُٔوْدُهٗ حِفْظُهُمَا ۚ وَهُوَ
الْعَلِيُّ الْعَظِيْمُ ۝

பின்னர்

وَلَهٗ مَا سَكَنَ فِي الَّيْلِ وَالنَّهَارِ ؕ وَهُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ ۝

பின்னர்

ثُمَّ سَوّٰىهُ وَنَفَخَ فِيْهِ مِنْ رُّوْحِهٖ وَجَعَلَ
لَكُمُ السَّمْعَ وَالْاَبْصَارَ وَالْاَفْـِٕدَةَ ؕ قَلِيْلًا مَّا تَشْكُرُوْنَ ۝

பின்னர்

وَنُنَزِّلُ مِنَ الْقُرْاٰنِ مَا هُوَ شِفَآءٌ وَّرَحْمَةٌ لِّلْمُؤْمِنِيْنَ

என்ற ஆயத்துகளையும் ஓதி பல் வலியுள்ள இடத்தின் கன்னத்தில் தடவினால் ரஹ்மான் கிருபையால் பல்வலி நீங்கும்.

10. சளிநீங்க சிறு உப்புக்கல்களில் ஏழு உப்புக்கல்களில் ஒவ்வொன்றிலும் ஏழு தடவை ஆயத்துல் குர்ஸியை ஓதிவிட்டு ஏழு நாட்கள் அதிகாலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டால் நெஞ்சிலுள்ள சளி நீங்கும்.

11. ஆயத்துல் குர்ஸீயுடைய அட்சரங்களின் எண்ணிக்கை நூற்று எழுபது. இந்த எண்ணிக்கைப்படி ஆயத்துல் குர்ஸீயை

நூற்று எழுபது தடவை ஓதுபவர் தனது வாழ்நாளில் எந்த அருவெறுப்பையும் அடைய மாட்டார். அவருக்கு விரோதமாக எவரும் சொல்லாலோ செயலாலோ தீமை செய்யச் சக்தி பெறமாட்டார். இவ்வுலகிலோ தீனிலோ அவருக்கு எந்த இடைஞ்சலையும் செய்து விட முடியாது. ஷைத்தான் தீண்டுவதை விட்டுக் காப்பாற்றப்படுவார்.

இரவு நேரங்களில் மனித நடமாட்டம் இல்லாத இடத்தில் தன்னந் தனியாக அமர்ந்து இந்த ஆயத்தை 170 தரம் ஓதி துஆச் செய்தால் அந்த துஆவில் கேட்கப்பட்ட காரியத்தை அல்லாஹு தஆலா உடனே நிறைவேற்றி வைப்பான் என்று அஷ்ஷெய்குல் பூனி ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறியுள்ளார்.

12. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சிறிய தந்தையின் புதல்வரே! எனக்கு ஒரு புதல்வன் இருக்கிறான். அவனுடைய வயிற்றில் பித்த நீர் இருக்கிறது. அதற்கு சிகிச்சை என்னவென்று ஒருவர் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா அவர்களிடம் வினவினார். அதற்கவர் "ஆம் சிகிச்சை இருக்கிறது. கஸ்தூரி குங்குமம் கலந்த மையால் அவனுடைய வயிற்றில் ஆயத்துல் குர்ஸீயை எழுதும். பின்னர், சுத்தமான ஒரு பாத்திரத்தில் (அதே மையால்) அதனை எழுதிக்கழுவி குடிக்கச் செய்யும். அல்லாஹு தஆலாவின் கிருபையால் அதில் நோய் நிவாரணி இருக்கிறது" என்று கூறினார்கள். ஆயத்துல் குர்ஸீக்கு ஒரு நாவும் இரண்டு உதடுகளும் இருக்கின்றன. அவற்றால் அது அல்லாஹு தஆலாவை தஸ்பீஹு செய்கின்றது என்பதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறச் செவியேற்றேன் என்றும் அவர் கூறினார் என்று அறிவித்தார்.



13. தன்னுடைய வீட்டுத் தலைவாசலின் மீது, கடைத் தலைவாசலின் மீது அல்லது தோட்டத்து தலைவாசலின் மீது ஆயத்துல் குர்ஸீயை எழுதினால் செல்வம் பெருகும்; நஷ்டம் வராது. வெளியிலிருந்து திருடர் நுழைய மாட்டார். களிமண் உருண்டையில் ஆயத்துல் குர்ஸீயை எழுதி தானியங்களின் மத்தியில் வைத்திருந்தால் அதில் திருட்டுப் போகாது. அதில் பரக்கத்துச் செய்யப்படும்.

**குறிப்பு:-** இந்தக் காலத்தில் கண்ணாடியிலோ காகிதத்திலோ எழுதப்பட்ட குர்ஆன் ஆயத்துகளுக்கு பிரேம் போட்டு வீடுகளிலும் கடைகளிலும் மாட்டி வைப்பதை நாம் பார்க்கிறோம். இதனை இது குறிக்காது. வியாபாரிகள் வர்த்தக நோக்கத்தை முதன்மையாகக் கொண்டு இவற்றை தயார் செய்கின்றனர். பொது மக்கள் பரக்கத்தை நாடி இவற்றை வாங்கி தங்கள் வீடுகளில் அலங்காரமாக வைக்கின்றனர். இவைகள் இந்தக் காரியங்களுக்கென பெரியோர்கள் பிரத்தியேகமாக எழுதியவைகளல்ல. இவை அச்சிடப்பட்ட பிரதிகளாகும். நினைத்த மாத்திரத்தில் எவரும் இவற்றை அப்புறப்படுத்தவும் வேறு இடங்களுக்கு மாற்றவும் முடியும். சன்மார்க்க விரோதிகள் இவற்றை எடுத்து காலில் போட்டு மிதித்து அவமரியாதை செய்யவும் முடியும். இவற்றை சுவரில் மாட்டி விட்டு அந்த வீட்டிற்குள்ளிலேயே பாவங்களைச் செய்யவும் கூடும். இவ்வாறான காரியங்கள் நிகழ்ந்தால் பரக்கத் உண்டாகாது. நேர்மாறாக தொல்லைகள்தான் ஏற்படும். இந்த மாதிரியான ஆயத்துகள் எழுதப்பட்ட அறைகளில் கணவனும் மனைவியும் ஒன்றாகப்படுத்து சயனிக்கவும் கூடாது. கண்ணுக்குத் தெரியாமலும் பிறர் அவமதிப்பதற்கான வாய்ப்பு இல்லாமலும்

இருக்கிற முறையில் பெரிய மனிதர்களைக் கொண்டு பிரத்தியேகமாக எழுத வேண்டும்.

14. இந்த ஆயத்து எழுதப்பட்டு மய்யித்துடன் கப்ரில் வைக்கப்பட்டால் கப்ரில் வேதனை செய்யப்பட மாட்டாது. கப்ரில் நடைபெறும் விசாரனை மலக்குகள் கடுமையின்றி விசாரிப்பர் என்று **ஷம்ஷல் மஆரிஃப்** என்ற நூலில் எழுதப்பட்டிருக்கிறது.

**குறிப்பு:-** மேலே கண்ட நன்மை ஏற்படுவதற்கு அந்த மைய்யத்து ஈமானுடன் மரணமடைந்திருக்க வேண்டும். இது ஷர்த்து. தவிர, இந்த வசதி கப்ரில் இருக்கையில் மட்டும்தான். கியாமத்து நாளில் நடைபெறும் பொது விசாரணையில் விசேஷ வசதி எதுவும் இருக்காது. அங்கு எல்லாருக்கும் உள்ளது போலவே இந்த மையத்திற்கும் இருக்கும். மையத்தின் நெற்றியிலோ தலைப்பாகையிலோ கஃபனிலோ இந்த ஆயத்தையோ திருக்குர்ஆனிலுள்ள இதர ஆயத்துகளோ சூரத்துகளோ எழுதப்படுவது கூடும். குற்றமான செய்கையல்ல. மையித்தை கழுவிக் குழிப்பாட்டி சுத்தமான கஃபன் உடை அணிவித்த பின்னர் அது (நஜீஸாக) அசுத்தமாக இருப்பதில்லை என்று உலமாக்கள் கருதுகின்றனர் என்பதாக **துர்ருல் முக்தார்** என்ற நூலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

15. இந்த ஆயத்தை தனித்தனி அட்சரமாக தூய பாத்திரத்தில் (தட்டையில்) கஸ்தூரி குங்குமம் பன்னீரால் தயார் செய்யப்பட்ட மையினால் எழுதி இதன் வார்த்தைகளின் எண்ணிக்கைப்படி ஐம்பது நாள் குடித்தால் அதாவது ஐம்பது நாளும் நோன்பு நோற்று இது எழுதப்பட்டு கழுவிய தண்ணீரை அருந்தி நோன்பு துறக்க வேண்டும். மழைத் தண்ணீரில்



இதனைக் கழுவுவது நல்லது. மாத ஆரம்பத்திலிருந்து நோன்பு நோற்று இதனைக் கொண்டு நோன்பு துறக்க வேண்டும். அத்துடன் நோன்பு துறக்கும் போது ஏழு முறை ஆயத்துல் குர்ஸீயை ஓதிக் கொள்ள வேண்டும். ஓதிய பின்னர்

اَللّٰهُمَّ اِنِّيْ اَسْئَلُكَ بِحَقِّ هٰذِهِ
اَلْاٰيَةِ الشَّرِيْفَةِ اَنْ تُعَلِّمَنِيْ الْعِلْمَ اللَّدُنِّيْ

**அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக பிஹக்கி ஹாதிஹில் ஆயத்திஷ்ஷரீஃபத்தி அன் துல்ஹினில் இல்மல்லதுன்னீ** என்றும் துஆ செய்து கொள்ள வேண்டும். குறிப்பிட்ட ஒரு கல்வியை நாடினால் அந்தக் கல்வியைக் குறிப்பிட வேண்டும். இப்படிச் செய்தால் எல்லாக் கலைகளிலும் தேர்ந்த மேதையாகி விடலாம்.

16. தன் உடல் நோய்களுக்கும் வலிகளுக்கும் பரிகாரம் காணவேண்டும், சிகிச்சை செய்வித்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புவோர் கஸ்தூரி குங்குமம் பன்னீர் ஆகியவற்றால் மை தயாரித்து ஆயத்துல் குர்ஸியை மூன்று தரம் எழுதி وَلَوْ اَنَّ قُرْاٰنًا سُيِّرَتْ بِهِ الْجِبَالُ என்ற ஆயத்தையும் கடைசி வரையில் எழுதி முடித்து விட்டு நறுமணம் புகைத்துக் கழுவிய பின்னர் ஏழு முறை ஆயத்துல் குர்ஸீயை ஓதி ஊதி காலை மாலை இருவேளை வீதம் மூன்று நாட்கள் மொத்தம் ஆறு வேளை குடித்தால் அல்லாஹு தஆலா சகல நோய்களில் இருந்தும் குணப்படுத்துவான் இன்ஷா அல்லாஹு தஆலா.

திருக்குர்ஆனிலுள்ள ஆயத்துகளில் ஆயத்துல் குர்ஸீ சிறந்தது என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஆயத்துல் குர்ஸீதான் (அல்லாஹு தஆலாவின்) இஸ்முல் அஃளம் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்.

நம்மிலுள்ள முற்காலத்துப் பெரியார்களும் இவ்விரு ஹதீஸ்களிலும் கூறப்பட்டுள்ள கருத்தை ஊர்ஜிதம் செய்துள்ளார்கள். இந்த ஆயத்தில் ஐந்து பெயர்கள் இருக்கின்றன. இந்த ஐந்தும் மகத்தானவை. இவற்றை விர்தாக ஓதி வருவதில் பல இரகசியங்கள் இருக்கின்றன. இவற்றை நிரந்தரமாக தினந்தோறும் ஓதி வந்தால் நன்மையை அடையலாம்.

இஸ்முல் அஃளம் எது என்பதைக் குறித்து ஞானவான்கள் மட்டுமின்றி இமாம்களும் கூடக்கூறியுள்ளனர். அல்லாஹ் என்ற பெயர் தான் இஸ்முல் அஃளம் என்று இமாம் அபூஹனீஃபா ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறியுள்ளார்கள்.

**யாஹய்யு யாகய்யூம்** என்பது இஸ்முல் அஃளம் என்று வேறு பல இமாம்கள் கூறி இருக்கின்றனர். இந்த மூன்று பெயர்களும் ஆயத்துல் குர்ஸீயினுள் அடங்கி இருக்கின்றன. ஆகவே, ஆயத்துல் குர்ஸீயிலுள்ள ஃபஸ்லுகள் (எண்ணிக்கை பதினேமு) வார்த்தைகள். (எண்ணிக்கை ஐம்பது), அட்சரங்கள் எண்ணிக்கை நூற்று எழுபது) இம்மூன்று எண்ணிக்கைகளையும் தமுவி ஆயத்துல் குர்ஸீயை நிரந்தரமாக ஓதி துஆச் செய்தால் இஸ்முல் அஃலமை ஓதி துஆ செய்த பலனை அடையலாம்.



தவிர, இந்த ஆயத்தினுள் ஓர் இறைக் கொள்கையை உணர்த்தும் வாசகமாகிய **லா இலாஹ இல்லல்லாஹு** என்ற வாக்கியம் இருக்கிறது. செல்வம் பெருக வேண்டும் என்று விரும்புவோர் **லாஇலாஹ இல்லல்லாஹுர் ரஸ்ஜாக்** என்றும், நோய் நிவாரணத்தை விரும்புவோர் **லாஇலாஹ இல்லல்லாஹுஷ் ஷாஃபீ** என்றும், கண்ணியம் பெருக வேண்டும் என்று விரும்புவோர் **லாஇலாஹ இல்லல்லாஹுல் முஇஸ்ஸு** என்றும், பகைவர் பணிந்து விட வேண்டும் என விரும்புவோர் **லாஇலாஹ இல்லல்லாஹுல் கஹ்ஹார்** என்றும், பழிவாங்க வேண்டும் என்று விரும்புவோர் **லாஇலாஹ இல்லல்லாஹுல் முன்த்தகிம்** என்றும், அன்பு பெருக வேண்டும் என்று விரும்புவோர் **லாஇலாஹ இல்லல்லாஹுல் வதூத்** என்றும் ஓத வேண்டும். அதாவது அவரவருடைய தேவைக்கு பொருந்திய ஒரு பெயரை அஸ்மாஉல் ஹுஸ்னாவிலிருந்து பொறுக்கி எடுத்துச் சேர்த்து எண்ணிக்கையை நிர்ணயிக்காமல் ஏராளமாக இயன்ற வரையில் தினந்தோறும் நாள் தவறாமல் ஓதிக் கொண்டே இருக்க வேண்டும்.

**அல்அலிய்யுல் அளீம்** என்ற இவ்விரண்டு இஸ்முகளும் இந்த ஆயத்தின் இறுதியில் இருக்கின்றன. இவ்விரு இஸ்முகளும் உயர்வையும் மகத்துவத்தையும் அளிக்க வல்லவை. இவ்விரு இஸ்முகளையும் நிரந்தரமாக ஓதுபவர் உயர் பதவிகளையும் அந்தஸ்துகளையும் அடைவார். கொடுமையான அதிகாரிகள், பகைவர்கள், அக்கிரமக்காரர்களிடம் அலுவல் ஏற்பட்டு அவர்களிடம் செல்ல நேர்ந்தால் **அல்அளீம்** என்ற இஸ்மை ஓதிக் கொண்டு சென்றால் தீங்கு நேராது.

இந்த ஆயத்திலுள்ள ஐந்து திருப்பெயர்களையும் ஒன்று சேர்த்து **அல்லாஹு லா இலாஹ இல்லா ஹுவல் ஹய்யுல்**

**கய்யூமுல் அலிய்யுல் அளீம்** என்று ஓதி துஆச் செய்தால் நாடிய காரியம் கைகூடும். ஆனால் நிரந்தரமாக ஓதி துஆ செய்ய வேண்டும். கிப்லாவை முன்னோக்கி இருந்து ஓதி துஆ செய்ய வேண்டும்.

இவற்றை முன்னூற்றுப் பதின்மூன்று தடவை ஓதி துஆ செய்வது சிறந்தது. கைக்கு மெய்யாக உடனே நிறைவேறும். இந்த எண்ணிக்கையை கூட்டாமலும் குறைக்காமலும் ஓத வேண்டும்.

**குறிப்பு:-** இக்காலத்தில் எத்தனையோ பேர் ஓதிப் பார்த்தல், தட்டை எழுதிக் கொடுத்தல். தாவீதுகள் எழுதிக் கொடுத்தல் போன்ற காரியங்களைச் செய்து அவற்றிற்குத் தக்க கை மாறுகளைப் பெறுகின்றனர். அவர்களில் அநேகர் இதனை தொழில் முறையிலும் கையாள்கின்றனர். பொதுமக்கள் இவர்களிடம் ஓதிப் பார்த்தல், தட்டை எழுதுவித்துக் குடித்தல், தாவீதுகள் எழுதி வாங்குதல் முதலிய காரியங்களைச் செய்கின்றனர்.

இவர்களில் பலருக்கு இவைகளால் எவ்விதப் பயனும் ஏற்படுவதில்லை. சிலருக்கு ஒரு சமயம் பலனளிக்கிறது. இன்னொரு சமயம் பலனளிப்பதில்லை. இதற்குக் காரணம் ஹதீஸ்களில் சொல்லப் பட்டுள்ள விபரங்கள் பொய் என்பதோ அந்த ஹதீஸ்கள் இட்டுக் கட்டப்பட்டவைகள் என்பதோ பெரியோர்களான இமாம்களும் ஒலிமார்களும் தவறானவை களைக் கூறினார்கள் என்பதோ அல்ல. ஹதீஸ்களில் சொல்லப் பட்டவைகள் முற்றிலும் உண்மை யானவை. பெரியோர்கள் தங்கள் அனுபவத்தில் நேரிடையாக அனுபவித்துப் புரிந்தவை களைத்தான் கூறினார்கள். என்றாலும், இவைகள் வெற்றி யடையாதிருப்பதற்குரிய காரணங்கள் வேறு.



ஒன்று. இதனைச் செய்யும் ஆமில்கள் கித்தாபுகளில் இம்மாதிரியாக எழுதி இருக்கிறதல்லவா? இதனை பரீட்சித்துப் பார்ப்போம் என்ற எண்ணத்தில் செய்வார்கள். இதனைச் செய்விக்கிற பொது மக்கள் இவற்றை நம்புவதில்லை. ஊரிலுள்ள பலரும் சொல்கிறார்கள். அவர்கள் சொல்லை மீறினால் பலவிதமான தப்பெண்ணங்கள் ஏற்படும். அதற்கு இடங்கொடுக் கலாகாது என்ற கருத்தில் இவற்றைச் செய்து கொள்கின்றனர். ஆகவே, குர்ஆன் ஹதீஸ்களில் சொல்லப்பட்டிருப்பவைகளில் பூரணமான நம்பிக்கை வைத்து ஓத வேண்டிய விர்துகளில் ஆயத்துகளில் துஆக்களில் உச்சரிப்பு பேதமின்றி அட்சர பேதமின்றி, அவற்றிற்குரிய ஷர்த்துகளில் கூடுதல் குறைவுதல் களைச் செய்யாமல் கணக்காக நிறைவேற்றினால் இன்ஷா அல்லாஹு தஆலா நிச்சயமாக பலனைக் காணலாம். அத்துடன் பாவச் செய்கைகளை விட்டு விலகி தவ்பா இஸ்திஃபாரும் செய்து கொள்ள வேண்டும். படிக்காதவர் பல்கலைக் கழகங்களில் பேராசிரியராக வேண்டும் என்று நிய்யத்துச் செய்தல். நடக்கக் கூட சக்தியற்றவர் தளபதியாக வேண்டும் என விரும்புதல், ஏதும் இல்லாத பரம ஏழை அரசனாக வேண்டுமென விழைதல் போன்றவை அவரவர் தகுதிக்கு மீறிய கோரிக்கைகள். இம்மாதிரியான கோரிக்கைகளையும் கூட இறைவன் அங்கீகரிப்பான். ஆயினும், இவற்றை இவ்வுலகில் செயல்படுத்த மாட்டான். என்றாலும், இக்காரியங்களில் இவர்கள் இருந்து செயல்பட்டு நேரான முறையில் நடந்து கொண்டால் எவ்வளவு நன்மைகளை இவ்வுலகில் சம்பாதிக்க இயலுமோ அவ்வளவு நன்மைகளுக்குரிய பிரதிபலனை மறுமையில் இறைவன் அளிப்பான். ஆகவே, நற்செயல்களைச் செய்ய நிய்யத்துச் செய்தல், உறுதிகொள்ளல், அவற்றிற்காக துஆ செய்தல் ஆகியவற்றிற்குரிய நற்பயன் அவரவருடைய தகுதிக்குத்

தக்கவாறு இம்மையிலோ மறுமையிலோ இரு உலகங்களிலுமோ உடனடியாகவோ தாமதமாகவோ இன்ஷா அல்லாஹு தஆலா நிச்சயமாக கிடைக்கும்.

ஆயத்துல் குர்ஸீயை வலது உள்ளங்கையில் குங்குமம் கொண்டு எழுதி அதனை நாவால் நக்கிச் சாப்பிட்டால் எந்தச் செய்தியையும் மறக்கமாட்டார். இவ்வாறு (தினசரி ஒரு தடவை வீதம்) ஏழு தடவை (ஏழு நாட்கள் அதிகாலையில் வெறும் வயிற்றில்) சாப்பிடவேண்டும். மலக்குகள் அவருக்காக மன்னிப்புக் கேட்பர் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஸல்மானுல் ஃபார்ஸீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அறிவித்துள்ளார்கள் என்று **கவாஸ்ஸுல் குர்ஆனில்** எழுதப்பட்டிருக்கிறது.

(மத்ரஸாக்களிலும் பள்ளிக் கூடங்களிலும் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அவர்களின் பெற்றோர்கள் இதனை செய்விப்பது நல்லது).

ஈரல் குலைவலி, இடுப்பு வலி போன்ற வலிகளுக்கு சுத்தமான தட்டையில் ஆயத்துல் குர்ஸீயை மூன்றுமுறை எழுதிக் கழுவி நோயாளிக்கு குடிக்கக் கொடுக்க வேண்டும். குடிக்கும் போது என்னுடைய இன்ன வியாதிக்காக இதனை நான் அருந்துகிறேன் என்று அந்த வியாதியின் பெயரையும் குறிப்பிட்டு நிய்யத்துச் செய்து கொள்ள வேண்டும். இந்த ஆயத்தின் பரக்கத்தால் அல்லாஹு சுப்ஹானஹு வதஆலா குணப்படுத்துவான்.

وَصَلَّى اللّٰهُ تَعَالَى وَسَلَّمَ عَلَى خَيْرِ خَلْقِهِ سَيِّدِنَا وَنَبِيِّنَا وَمَوْلَانَا مُحَمَّدٍ

وَعَلَى اٰلِهِ وَصَحْبِهِ اَجْمَعِيْنَ وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ